விலை ரூபா: 5.00 பக்கங்கள் :- பத்து **Registered as a News paper in Sri Lanka**





# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 28 செவ்வாய்க்கிழமை (13.08.2002) தொலைபேசி 3378 ஒலி 237


## வன்னி - கிழக்கு மாகாண போக்குவரத்து

# புலிகளின் கடல் பயணத்திற்கு

# அரசு நிபந்தனையுடன் அனுமதி

### கண்காணிப்புக்குழுவிற்கு அறிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் கிழக்கு மாகாணத்திற்கும் வன்னிக்கும் வாரத்தில் இரண்டு முறைகள் படகுகளில் செல்வதற்கு அரசு இணங்கியுள்ளது. இவ்வாறு படகுகளில் பயணம் செய்யும் போது புலிகள் ஆயுதம் எதனையும் வைத்திருக்கக் கூடாது எனவும் படகில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடி பறக்க விடப்பட்டிருப்பதுடன் பயணம் செய்யும் படகுகளில் ஆகக் குறைந்தது ஒரு கண்காணிப்புக் குழு உறுப்பினராவது பயணம் செய்ய வேண்டும் எனவும் இலங்கை அரசு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு நேற்று அறிவித்துள்ளது.**

வன்னியில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கான விடுதலைப்புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் நிலவிய இழுபறிநிலை நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

விடுதலைப்புலிகள் கடல் போக்குவரத்துக் குறித்து பிரதமரின் சமாதான செயலகத் தலைவர் பேர்னாட் குணதிலகவினால் நடைமுறை விதிகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ் விபரம் வருமாறு:

வாரத்தில் இரண்டு நாட்கள் காலை

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## சங்கரி தலைமையில் நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், நேற்றுத் திட்டமிட்டபடி யாழ். ரான் பங்களாவில் காலை 9.30 மணிக்கு அபிவிருத்திக் குழுத் துணைத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், எம்.பியுமான வீ. ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அ. விநாயகமூர்த்தி, ந. ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


மூத்த அரசியல் தலைவர் என்ற வகையில் தானே அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்று தெரிவித்த ஆனந்தசங்கரி, 2002ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்

(10ம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தனின் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 26 தினங்கள் நடை பெறவுள்ளது.



தேர்த் திருவிழா 5ம் திகதியும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். இம்முறை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயச் சூழலில் கூடுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களுக்கான வசதிகளை யாழ். மாநகர சபை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. (ஷ)

## மகாநாயக்கருடன்

## ஜே.வி.பி. நேற்று சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பயன்படுத்தி தம்மை பலப்படுத்தி வருகின்றனர் என்று ஜே.வி.பியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மல்வத்தபீட மகாநாயக்க தேரர் ரம்புக்வெல விபசி தேரரைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இச் சந்திப்பின்போது ஜே.வி.பியினர் புலிகள் தொடர்பான குற்றச் சாட்டைத் தேரரிடம் தெரிவித்தனர்.

துணைத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர்

முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்

(10ம் பக்கம் பார்க்க)

பயன்படுத்தி தம்மை பலப்படுத்தி வருகின்றனர் என்று ஜே.வி.பியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜே.வி.பியின் பிரமுகர்களான விமல்வீரவன்ச, நந்தன குணதிலக, ரில்வின் சில்வா ஆகியோர் நேற்று

இச் சந்திப்பின்போது ஜே.வி.பியினர் புலிகள் தொடர்பான குற்றச்சாட்டைத் தேரரிடம் தெரிவித்தனர்.

அத்துடன் விடுதலைப்புலிகள் சமாதானத்தை அடையும் குறிக்

(10ம் பக்கம் பார்க்க)

# காணாமல்போனோரின் உறவினர்கள் நேற்று யாழ். செயலகத்தின் முன் மறியல்

## பொதுப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

1996,1997ம் ஆண்டுகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறும் தமது உறவுகளை மீட்டுத் தருமாறும் கோரி, நேற்றுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணியினர் இணைந்து யாழ். செயலகத்தை முற்றுகையிட்டு மறியல் போரில் ஈடுபட்டனர்.

காலை 7.30 மணியளவில் யாழ். செயலகப் பகுதியில் பெருமளவில் திரண்ட காணாமல் போனவர்களின் உறவினர்கள் பொதுமக்கள் ஏக்கம் ததும்பிய முகத்துடன் யாழ். செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலக வாயில்களை மூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

இம் மறியல் போராட்டத்தினால் யாழ். செயலக, பிரதேச செயலகப் பணிகள் முற்றாக ஸ்தம்பித்தன.

(10ம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை மகேஸ்வரன் பகிஷ்கரித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் இந்து கலாசார அமைச்சருமான தி. மகேஸ்வரன் கலந்துகொள்ளவில்லை.

நேற்று யாழ்ப்பாணம் ரான பங்களாவில் இடம்பெற்ற இக்கூட்டத்துக்கு அமைச்சர் கலந்து கொள்ளாது அதனைப் பகிஷகரித்தார்.

அபிவிருத்திக்குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன நியமித்திருந்தார்.

இதனை ஆட்சேபித்த அமைச்சர்

(10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ~ பிரதமருக்கிடையில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## தயாரிப்புப் பணியில் லக்ஸ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்குமிடையில், நல்லுறவை ஏற்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று உருவாக்கப்படுவதாக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

இரு தலைவர்களுக்குமிடையில் அண்மைக் காலமாக அபிப்பிராயபேதங்கள் அதிகரித்துள்ள இவ்வேளையில் இருவருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமரினால் இப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பூரண சம்மதத்துடன் உருவாக்கப்படும் இவ் ஒப்பந்தம் மிக விரைவில் இரு தலைவர்களாலும் கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் மூன்று

(10ம் பக்கம் பார்க்க)

# அரசைப் பதவி நீக்கும் வரை ஆர்ப்பாட்டம் தொடரும்

## எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசின் தனியார் மயமாக்கல் கொள்கை மற்றும் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றை கண்டித்து நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கி நடத்தினார். பெருந்திரளான பொதுமக்கள் பிற்பகல் 4மணியளவில் மருதானையில் கூடி அரசுக்கு எதிரான சுலோகங்களை தாங்கியவாறு கொழும்பு ஹைட்பாக் மைதானத்தை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

மாலை 6மணியளவில் ஹைட்பாக் மைதானத்தில் எதிர்ப்புக் கூட்டம்

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### தேவை

தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றிற்கு O/Lபரீட்சையில் சித்தியடைந்த பெண் பிள்ளை தேவை. தொடர்பு சுமன் தொலைத்தொடர்பு நிலையம் இல.670மானிப்பாய்வீதி ஆலடிச்சந்தி ஓட்டுமடம் தொலைபேசி இலக்கம்021-2851

(சி-4840)


## இராசி பலன்

13 8 2002
(ஆடி 28 செவ்வாய்)
பஞ்சமி பி.ப 2.05 வரை
அத்தம் மு.ப 9.20 வரை
ராகுகாலம் 3 05-4.35
நல்ல நேரம் 10.35-12.05
சஷ்டி விரதம்
நான்காம் ஆடிச்செவ்வாய்

**மேடம்**
காரிய நன்மை, செய்தொழில்விருத்தி, உடல்நலம், மனமகிழ்ச்சி.

**இடபம்**
தாழ்ந்த சுபாவம், வணிக நன்மை, அதிகாரிகள் உதவி, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
வேலைக் கஷ்டம், அற்பர் உறவு, காரிய தாமதம், உடல் சோர்வு.

**கடகம்**
கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, காரிய நன்மை, வாக்கு வன்மை.

**சிங்கம்**
மாதர் நட்பு, செல்வாக்கு குறைவு, தனவிரயம், பிரயாணம்.

**கன்னி**
ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம், பெரியோர் ஆதரவு.

**துலாம்**
பிதா சிந்தை, கோபப்படுதல், காரிய அலைச்சல், நல்ல செயல்.

**விருச்சிகம்**
தெய்வ சிந்தை, சென்ற இடத்தில்செல்வாக்கு, குடும்ப சுகம் பொருள் சேர்க்கை.

**தனுசு**
கடின உழைப்பு, பணியாளர் உதவி, காரிய நன்மை, தர்மம்.

**மகரம்**
ஆன்றோர் மதிப்பு, வீண் பயம், புதிய திட்டமிடல், முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரிய தாமதம், போசன சுகம், சிறு வியாதி, வாகன பயம்.

**மீனம்**
அபூர்வ சந்திப்பு, பிரயாண நன்மை, களஸ்திர சுகம், கௌரவமான நிலை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## 3 ஆயிரம மெ. தொன் சீமெந்து வந்தது

(மந்திகை)

யாழ்: குடாநாட்டுக்கென கப்பல் மூலம் மூவாயிரம் மெற்றிக்தொன் சீமெந்து எடுத்துவரப்பட்டு இறக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன,

இந்துருவி கப்பல் மூலம் கடந்த வெள்ளிக்கிழமைபருத்தித்துறை இறங்குதுறைக்கு எடுத்துவரப்பட்ட சீமெந்தே இறக்கப்பட்டுவருகிறது.

(த-23)

# நகர ஒழுங்கமைப்பை பேணுமாறு பிரதேச சபைகளுக்கு கடிதம்

(மானிப்பாய்)

நகர ஒழுங்கமைப்பை பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி பிரதேச சபைகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நகர ஒழுங்கமைப்பைப் பேணிசிறந்த நகரத்தை அமைப்பதற்கும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் விதிமுறைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் அனுசரணையாக வேண்டிய உதவிகளைக்கோரி தனக் கூடாக விண்ணப்பிக்குமாறு பிரதேச சபைகளை அவர் அக்கடித மூலம் கேட்டுள்ளார்:

அக்கடிதத்தின் விபரம் வருமாறு:

பிரதேச சபைஎல்லைப்பரப்பினுள் அமைந்துள்ள நகரங்களையும் அதன் சூழலையும் நீண்ட காலம் பயன்படும் வகையிலே மீளமைக்க வேண்டியதன் அவசியம் பலராலும் உணரப்பட்டுள்ளது. இந் நிலையிலே பிரதேச நிர்வாக எல்லைப்பரப்பில் உள்ள பிரதேசங்களை மீளமைப்புச் செய்வதற்கு முன்னோடியாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

நகரவிதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படின் சுத்தமான, அழகு நிறைந்த, விபத்துக்கள், நெருக்கடிகள் அற்ற ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்களாகமாற்றியமைக்க முடியும்

எனவே, நகர ஒழுங்கமைப்பைப் பேணிசிறந்த நகரத்தை அமைப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளைப் பெறுமுகமாக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேசிய பௌதிகதிட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் நகர திட்டமிடலாளர்களின்சேவை பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதி வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்க்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஷ-232)

## தர்ஸ்டன் வித்தியாலய அணி வெற்றியீட்டியது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு தர்ஸ்டன் வித்தியாலயத்திற்கும் யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற ஓருநாள் கிரிக்கெட் போட்டியில் தர்ஸ்டன் வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி அணி 44 ஓவர்களின் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லவேந்திரா 50 ஓட்டங்களையும் கிருஷ்ணகுமார் விஷ்ணுவர்த்தன் ஆகியோர் முறையே 12 ஓட்டங்களையும் அகிலன் இரண்டு சிக்ஸர்கள் உட்பட 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தர்ஸ்டன் அணி 44 ஓவர்களின் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

இதில் சுமித்த வர்ண சூரிய ஓசக்கமாராட்சி ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 25,75 ஓட்டங்களையும் றொசான் பாலசூரிய 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

கடந்த 20 வருடங்களின் பின்னர் கொழும்பு பாடசாலை அணிஒன்றுடன் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(த-110,262)

## ஹீரோ சைக்கிள் வாங்குபவருக்கு காப்புறுதி

(யாழ்ப்பாணம்)

ஹீரோசைக்கிளைப் புதிதாக கொள்வனவு செய்பவர்களுக்கு செலிங்கோ காப்புறுதி கம்பனி விபத்துக் காப்புறுதியை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

இதன்பிரகாரம் மேற்படி சைக்கிள் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரின் பெயரிலும் முதல் 3மாதங்களுக்கு செலிங்கோ கம்பனியால்50 ரூபாப்படி காப்புறுதி செய்யப்படும்.

இக்காலப்பகுதியில் காப்புறுதி தாரருக்கு விபத்து மரணம் அல்லது விபத்தினால் முழுமையாக அங்கவீனம் ஏற்படின் ஒருஇலட்சம் ரூபாவும்.

விபத்தினால் நிரந்தர, பகுதியான அங்கவீனம் ஏற்படின் 50ஆயிரம் ரூபாவும்.

வீதிவிபத்தினால் வைத்தியசாலையில் சிகிச்சைபெற நேர்ந்தால் 5ஆயிரம் ரூபாவும் ஏனைய விபத்துக்கள் மூலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற நேர்ந்தால் 2ஆயிரத்து 500ரூபாவும் வழங்கப்படும்.

இதே வேளை காப்புறுதி காரர்காப்புறுதிப் பணத்தை தொடர்ந்தும் மாதாமாதம் செலுத்தி வந்தால் அக்காலப் பகுதியில் மேற்படி சலுகைகள் செல்லுபடியாகும்;

(உ)

## முஸ்லிம் வர்த்தகர்குழு யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கண்டி முஸ்லிம்வர்த்தகர் சங்க பிரமுகர்கள் குழுஒன்று நாளை 10மணிக்கு யாழ்வணிகர் கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படும் பொருட்கள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் துறை சார்ந்த இவர்களுடன் முகவர்களாகச் செயற்பட விரும்பும் யாழ் வணிகர்கள் இதில் கலந்துகொண்டுபயன் பெறுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுள்ளது.

(த.5)

## யாழ்.மின்சார சபையினால் மின் வாசிப்பு மானி விரைவில் பொருத்தப்படும்

(மந்திகை)

யாழ் குடாநாட்டிலுள்ள மின்பாவனையாளர்களுக்கு விரைவில் மின்வாசிப்பு மானி பொருத்தப்படவுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக கொழும்பிலிருந்து 28 ஆயிரம் மின் வாசிப்பு மானிகள் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் அவை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டதும் உடனடியாக மின்பாவனையாளர்களுக்கு பொருத்தப்படுமென்றும் மின்சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை குடாநாட்டில் பெரும்பாலான மின்பாவனையாளர்களிடம் மின் வாசிப்பு மானி இல்லாமலேயே மின் கட்டணம் அறவிடப்பட்டு வருகின்றது. இதனால் மின் பாவனையாளர்கள் மத்தியில் பலத்த அதிருப்தி நிலவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-23)

## நடமாடும் சுகாதார சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபையின் சுகாதாரக்குழுவினரால் நடத்தப்படும் நடமாடும் சுகாதார சேவை எதிர்வரும் 16ந்திகதி வெள்ளிக்கிழமை கல்வியங்காடு 12ம் வட்டாரத்தில் நடைபெற உள்ளது.

இந்த நடமாடும் சுகாதார சேவையில் கசிப்பு உற்பத்தியினால் ஏற்படும் தீமைகள் நுளம்புப்பெருக்கத்தால் ஏற்படும் தீமைகள் மற்றும் உணவகங்களில் சுகாதாரம் பேணுதல் ஆகியன சம்பந்தமாக அப்பகுதி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதுடன் அப்பகுதியில் சிரமதானமும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாநகரசபையின் வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மாநகர சபை உறுப்பினர்கள் சுகாதாரத் தொழிலாளர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

(த-19)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

வலி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக்கூட்டம் எதிர்வரும் 19ம் திகதி பி.ப 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பாடசாலையின் விபரம் மற்றும் ஆசிரியர்களின் சுயவிபரக் கோவை என்பவற்றைத் தயாரித்து சமர்ப்பிக்கும் படியும் இவற்றைச் சமர்ப்பிக்காத முன்பள்ளி பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்றும் வலி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் கு. சிவரஞ்சினி கேட்டுள்ளார்.

(இ-5)

## சைக்கிளுடன் கிணற்றில் வீழ்ந்து படுகாயம்

கோவில் கூட்டம்ஒன்றுக்கு சென்றுவிட்டு இரவு11மணியளவில் வீடுதிரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றுக்குள் சைக்கிளோடு விழ்ந்துபடுகாயமடைந்த நிலையில் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்:

சிறுப்பிட்டி தெற்குநீர்வேலியைச் சேர்ந்த ச.செல்வரெட்ணம் (வயது31)என்பவரே கிணற்றுக்குள் சைக்கிளோடு வீழ்ந்தவராவார்.

(த.6)

## வன்செயல்கள் தொடர்பான அறிக்கை விரைவில் அரசிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அண்மையில் நடந்த வன்செயல்கள் தொடர்பாக இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றினை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ். செனிவரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினதும் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனினதும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின் வடக்கின் தீவகம் கிழக்கின் வாழைச்சேனை பிரதேசங்கள் உள்ளிட்ட இடங்களில் இடம் பெற்றவன்செயல்கள் குறித்த அறிக்கையே இவ்வாறு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரும் சில அதிகாரிகளும் நேரில்சென்று விசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சமயத்தலைவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், மக்கள் ஆகியோரிடமிருந்து இவ்வன்செயல்கள் தொடர்பாக வாக்கு மூலங்களை ஆணைக்குழுவினர் பெற்றுள்ளனர்.

வருங்காலத்தில் இது போன்ற அசம்பாவிதங்களை எவ்வாறு தடுப்பது என்ற குறிப்புகளும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

(உ-8)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளைபுதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேவாரம், கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு, மாணவர்களின் கலைநிகழ்வுகள் என்பன அன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக ஆத்மஜோதி தியான மணி மண்டப சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஷ)

## இவ்வாண்டுக்கான வடக்கு புனர்வாழ்வு நிதி 50 கோடி

(திருநெல்வேலி)

வடக்கின் புனர்வாழ்வுக்கென கடந்த வருடம் 120 கோடி ரூபா ஒதுக்கப்பட்டபோதும், இவ்வருடம்50கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 25 கோடி ரூபா யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் புனரமைப்புக்கும்மிகுதி இடம் பெயர்ந்த குடும்பங்கள்ஒவ்வொன்றுக்கும் 65 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவேண்டும்என்றும்சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளதாக தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

(உ-43)

## சங்கீத செய்முறைப் பரீட்சை

வடஇலங்கை சங்கீதசபையினால் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 17ந்திகதி தொடக்கம் 23ந்திகதி வரை நடைபெறவுள்ளது.

மேற்படிசெய்முறைப் பரீட்சை நிலையங்கள் தொடர்பாகபரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில்நடைபெறவிருந்த செய்முறைப்பரீட்சை சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வடஇலங்கைச் சங்கீத சபைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(த.19)

### நோர்வே சென்றுள்ள
# புலிகளின் ஆலோசகர் அன்ரன் அங்கு பொதுக்கூட்டங்களில் பங்கேற்பார்

(சொழும்பு)

தற்போது ஒஸ்லோ சென்றிருக்கும் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜன் பீற்றர்சன், பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், மற்றும் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

இவருடன் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் கண்காணிப்புக்குழு தலைவர் புறுஹெவ்டே ஆகியோர் நோர்வே சென்றுள்ளனர்.

வியாழன்வரை ஒஸ்லோவில் தங்கியிருக்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், நோர்வேயிலுள்ள இலங்கைத் தமிழர்களின் குழுக்கள் சிலவற்றை சந்தித்து உரையாடல்கள் நடத்தவுள்ளார்.

ஒஸ்லோவிலும், பேர்ஜின் நகரிலும் இரு பொதுக்கூட்டங்களிலும் உரையாற்றுவார். சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்கள்பற்றி இவர் இச்சந்திப்புகளில் தெரிவிப்பார்.

சிறுநீரக சத்திர சிகிச்சை நடத்தப்பட்ட ஒஸ்லோ வைத்தியசாலையில் மருத்துவ ஆலோசனையும் சிகிச்சையும் பெறவுள்ள இவர் தனக்கு சிறுநீரகம் ஒன்றை அன்பளிப்பு செய்த டொனால்ட் என்னும் இலங்கைத் தமிழரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

# மாலைதீவு ஊடாக பாலா வன்னிசெல்ல அனுமதிக்கக் கூடாது
### சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல்ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரிட்டனில் இருந்து வன்னிக்கு பயணம் செய்யும்போது, மாலைதீவை இடைத்தங்கல் தளமாகப் பயன்படுத்த மாலைதீவுஅரசு அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு, இந்திய ஜனதாக்கட்சித்தலைவர் சுப்பிரமணிய சுவாமி, மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமுக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

1988 ஆம் ஆண்டு இலங்கைத்தமிழ் இயக்கமொன்று செய்தசதியில் இருந்து, மாலைதீவை மீட்டவர் முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி.

அவரைப் படுகொலை செய்த கொலையாளிகளை எவ்வாறு நாட்டுக்குள் அனுமதிக்கலாமென்று சுவாமி அக்கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (இ)

### எதிரிகளின் பிரித்தாளும்,
# தந்திரத்திற்குப் பலியாகாது உரிமைக்காக போரிட வேண்டும்
### அ.இ.த.கா. மகாசபைக் கூட்டத்தில் தீர்மானம்

(திருநெல்வேலி)

தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையை மேலும் வலிமைப்படுத்தி தமிழ்- முஸ்லிம் மக்கள் இந்த மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டுமானால், எதிரிகளின் பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாகாது உரிமைக்காக போரிட வேண்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 60 வது மகாசபைக் கூட்டம் நேற்று முன்தினம் அதன் யாழ். அலுவலகத்தில் இடம் பெற்ற போது மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

அவ்வமயம் எடுக்கப்பட்ட மற்றைய தீர்மானங்களாவன,

● சுதந்திரம், சுயமரியாதை, சுபீட்சம் உள்ள இனமாக தமிழினம் வாழ வேண்டும் என்ற கொள்கை வழி நடக்கும் எமது கட்சியில், இன்னும் பலரை இணைத்து இவற்றுக்காக பாடுபடுதல் வேண்டும்.

● சமாதான சுகவாழ்வை பெரிதும் விருப்புவதுடன், சுதந்திர வாழ்வை உயர்வாக மதித்தல் இதற்காக உயிர் நீத்த உத்தமர் குமார் பொன்னம்பலத்தின் இலட்சியப் பாதையில் வழுவாது நடத்தல்.

● காணாமல் போன உறவினர்களைத் தேடியலைந்து கொண்டிருக்கும் உடன்பிறப்புகளுக்கு ஆறுதலை அளிப்பதுடன், உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்துதல்.

● இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், குடிமனைகள், பாடசாலைகள், கோயில்கள், தொழில் நிலையங்கள் என்பவற்றில் இருந்து படையினரை வெளியேற்றி இயல்பு நிலையைத் தோற்றுவிக்குமாறு அரசை வற்புறுத்துதல்.

● வறிய மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களின் விலையைக் குறைத்து அளவைக் கூட்டுமாறு கோருதல்.

● சமாதானப் பேச்சுக்குத் தடையாக உள்ள விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக்கோருதல்.

● பாஸ் முறையை நீக்கி மீனவர்களை சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோருதல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (உ-43;77)

# கொழும்புத்துறைப் பகுதி வீதிகளினூடாக பயணம் செய்ய மக்கள் அச்சம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வீதிகள் மக்கள் பாவனைக்காக ஒழுங்கான முறையில் திறக்கப்படாததனால் அப்பகுதி மக்கள் மீளக்குடியமர அச்சம் காட்டி வருகின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் மிதிவெடி மற்றும் பொறிவெடிகள் மறைந்திருக்கலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இதனால் வளவுகளின் ஊடாக பாதை அமைத்தே தமது இருப்பிடங்களை அவர்கள் அடைய வேண்டியுள்ளது. (ஷ-262)

### உள்ளூராட்சி மன்ற
# அபிவிருத்திஉதவியாளர்க்கு வேதன ஏற்றம்

(சுதுமலை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணி புரியும்அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களாக கடமை புரியும் பட்டதாரிகளிற்கு வினைத்திறமை காண்தடைப்பரீட்சை நடை பெறாத காரணத்தால், 2002 ஆம் ஆண்டுக்கான வேதன ஏற்றத்தை வழங்கும்படியும்,

இவ் உத்தியோகத்தர்களை பதவியில் உறுதிப்படுத்துவது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் உள்ளூராட்சி உதவியாளர்களின் சங்கம் பல கடிதங்களை உரியவர்களுக்கு அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-252,232)

### கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்திற்கு
# நிவாரண விநியோகத்தால் மாதாந்தம்40ஆயிரம் நட்டம்

(யாழ்ப்பாணம்)

நிவாரண விநியோகத்தினால் கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாதாந்தம் 40 ஆயிரம் ரூபாவை இழந்து வருகிறது.

இதனை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையிடம் மேற்படி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சேவைக் கட்டணத்தினை அதிகரிப்பதன் மூலம் தமது நட்டத்தினை ஈடு செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# வெலிக்கடைமேல்நீதிமன்ற பணிகள் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச் சாலையில் அமைக்கப்பட்ட விசேட மேல் நீதிமன்றப் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை விசேடமாக விசாரிப்பதற்காகவே இந்நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நீதிமன்றத்துக்கு சிரேஷ்ட நீதிபதி ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாளை மறுதினம் நியமிக்கவுள்ளார். இதன் பின்னரே வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 300 சந்தேக நபர்கள் மீதான வழக்கு விசாரணைகள் தாமதம் அடைந்து வருவதனாலேயே இந் நீதிமன்றம் அமைக்கப்பட்டதாகசட்ட மறுசீரமைப்பு அமைச்சர்வி.ஐ முலொக்குபண்டார தெரிவித்துள்ளார். (உ-8)

### சவுதியில் தடுத்து வைக்கப்பட்ட
# 36 இலங்கையர் நேற்று நாடு திரும்பினர்

(கொழும்பு)

சவுதி ஜித்தா துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 140 இலங்கையர்களில் 36 பேர் நேற்று அங்கிருந்து அழைத்துவரப்பட்டனர்.

சவுதி அரேபியாவில் பணிபுரிவதற்காக சென்ற இவர்கள் அனைவரும் அங்கு பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

சவுதி அரேபிய தூதரகத்துடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தொடர்பு கொண்டதையடுத்து இவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை அண்மைக்காலமாக இத்தாலிக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்திச் செல்லும் முகவர்கள் குறித்து குற்றப்புலனாய்வினர் தேடுதல் நடத்தி வருவதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-8)

# விவசாயக் காணிகளை துண்டாடாதவாறு சட்டம் விரைவில் அமுலாகும்

(கொழும்பு)

விவசாய மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் காணிகளைத் துண்டாட முடியாதவாறு புதியசட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக காணி அமைச்சர் ராஜிதசேனரட்ண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக 'காணி உரிமைச்' சட்டமூலம் வெகு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இப்புதிய சட்டமூலம் அமுலுக்கு வருமாயின் கொலனி, விவசாயக்காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைக்கு பயன்படுத்தக்கூடிய காணிகள் துண்டாடப்படுவது தடைசெய்யப்படும். (உ-8)

### நல்லூர் உற்சவத்தைஒட்டி
# தெய்வீக இசையரங்கு இன்று முதல் 27 தினங்கள்

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் நல்லூர் முருகன்ஆலயஉற்சவ காலத்தை ஒட்டிய தெய்வீக இசையரங்கு, இன்று முதல் எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரை 27 தினங்கள் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

முதலாம் நாளான இன்று செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆசியுரைவழங்குவார் தொடர்ந்து கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறவுள்ளது. (உ)

# பொதுத் தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி தயார்
### ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுத் தேர்தலை எதிர் கொள்ளத் தயார் என கட்சியின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா, ஐக்கிய தேசியகட்சியுடன் ஒத்துழைக்கத் தவறும்பட்சத்தில் இறுதிமாற்று நடவடிக்கையாக பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும் என ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு கட்சியின் சில உறுப்பினர்கள்எதிர்ப்புத்தெரிவித்து வருவதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையும்இல்லை எனவும் அவர்சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

# குழந்தையின் உடல் உள மேம்பாட்டில் நாட்டார் பாடல்கள்

நவீன உலகில் நவீன கண்டுபிடிப்புக்கள், நவீன சிந்தனைகள், நவீன வாழ்க்கை முறைகள் உருவாகிய இன்றைய காலத்தில் வாழுகின்ற மனித இனத்திற்கு, நவீன நோய்களும், புதிய மருந்துகளும் ஆட்கொண்டுள்ள வேளையில், புராதன காலத்தில் எம் முன்னோர்கள் நோயற்ற வாழ்க்கையுடன், நீண்ட ஆயுளையும் கொண்ட பூரண மனிதர்களாக வாழ்ந்ததற்குரிய இரகசியங்கள் இல்லாமல் இல்லை. அதற்கு அவர்களின் கிராமிய வாழ்க்கை முறைதான் காரணமென அச்சொட்டாகக் கூறலாம். அவர்களின் கிராமிய வாழ்க்கை முறையில் நாட்டார் பாடலானது குழந்தை வளர்ந்து பருவமடையும் காலங்களில் பெறும் உடல், உள மேம்பாடு முக்கியமானது. அம்மேம்பாட்டின் மூலம், பலமான உள வளர்ச்சி மிகுந்த நோயற்ற உடல் வளர்ச்சி பெற்ற, பூரண சுகமுடைய பிரசைகள் அக்காலச் சமூகத்தில் உருவாகியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கிராமத்தவர் ஆட்டமும், பாட்டமும் இசையோடு சேர்ந்து தெம்மாங்கு பாடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதனால் கிராமந்தோறும் கிராமத்துப் பாடல்கள் தோன்றின. உழுதல், விதைத்தல், களைபிடுங்கல், அருவி வெட்டுதல், உப்பட்டி கட்டுதல், சூடடித்தல், நெல் குற்றுதல், வண்டி யோட்டுதல், மரமரிதல், படகு ஓட்டுதல், மீன் பிடித்தல் முதலிய பல்வேறு தொழில்களை களைப்பின்றி, அலுப்பின்றி செய்ய கிராமத்து இலக்கியங்கள் தோன்றின. இன்னும் இளைப்பாறும் நேரங்களில், வருடப்பிறப்புக் காலங்களில், கோயில் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் ஊஞ்சலாடல், பல்வகை விளையாட்டுக்கள், கரகம், காவடி போன்ற கிராமத்துக் கலைகளுக்கு கிராமத்துப் பாடல்கள் தோன்றின. இவற்றைவிட குழந்தை பிறந்ததிலிருந்து இறப்புவரையும் உள்ள ஒவ்வொரு பருவத்திலும் இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் பாடல்கள் தோன்றின. இந்த வகையில், குழந்தை பிறந்து விளையாட்டுப் பருவத்தை அடையும் வரையிலான நாட்டார் பாடல்கள் அவர்களின் மேம்பாட்டுக்கு எந்தளவு உதவுகிறது என்பதனை நோக்குவதே எனது முக்கிய நோக்கமாகும்.

தாய் தன் குழந்தையைத் தாலாட்ட எடுத்த முதல் நிகழ்வே குழந்தை இலக்கியமாகிறது. எந்தக் கருவூலம் குழந்தையின் கருத்தையும், உள்ளத்தையும் கவருகிறதோ அதுவே குழந்தை இலக்கியமாக பரிணமித்தது. இதில் தாலாட்டு முதல் இடத்தைப் பெறுகிறது. அது உலகெங்கினும் ஓர் உள்ளத்தின் பாசவுணர்வில் ஊற்றெடுக்கும் ஒரு ஜீவநதியாக விளங்குகிறது. அதில் தாயும் சேயும் சங்கமமாகின்றன.

ஓசையுணர்வை உணர்த்துவது செவிப்புலனாகும். இப்புலனுணர்வு, இளமையிலேயே செவ்வையாக ஊட்டி வளர்க்கப்பெறுதல் வேண்டும். இது உடல், உள விருத்தியிற் பெரும் பங்கினைப் பெறுவதால், அது செம்மையாகப் பேணப் பெறுதலும் வேண்டும். குறிப்பாக, குழந்தையின் விடயத்தில் இவ்வுணர்வை மிகவும் கவனமாகவும், கரிசனையாகவும் கட்டிக் காக்கப்படல் வேண்டும். ஏனெனில் குழந்தையின் உடல் உள வளர்ச்சியிற் செவியுணர்வு கூடிய தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதனாலாகும். குழந்தையின் வயது, பருவம் முதிர்ச்சிக்கு ஏற்ப, அதன் துண்டற்பேறுகளும், இயல்பூக்கங்களும் வெளிப்படும். அந்த வகையில் குழந்தையின் மனப்பதிவுக்கும், மனவிருத்திக்கும் முதற்கண் உறுதுணையாக நிற்பது குழந்தைப் பாடலேயாம். அதிலும் 'தாலாட்டு'ப் பாடலே குழந்தைக்கு முதன் முதலில் தன்தாய் மூலம் அறிமுகமாகும் ஒரு சிறந்த கருவூலமாம் என்றார் நம் நாட்டு அறிஞர் ஒருவர்.

குழந்தை பிறந்தவுடன் "குவா! ... குவா!..." என்ற இசை ஓசை, எழுப்புகின்றது. அதற்குப் பதிலாக குழந்தையின் தாய் கொடுக்கும் இசையில் தன்வசப்பட்ட குழந்தை அமைதியாகி தூங்குகின்றது. குழந்தையின் மெதுமையான உள்ளத்தில் தொடும்படியாக, தாலாட்டில் பொருளோடு சேர்ந்த தாயின் இனிமையான இசை ஓசை குழந்தையின் செவியினூடாக ஊடுருவுகிறது. இசைக்கு அடிமை கொள்ளாதவர்கள்யாவருளர்? தாலாட்டின் இசையின் பத்திலே குழந்தை எல்லாவற்றையும் மறந்து கண்ணுறங்குகிறது. இத்தாலாட்டானது குழந்தைகளின் மெதுமையான இதயங்களைச் சுண்டி இழுத்து அவர்களை ஆனந்தக்களிப்பில் ஆற்றுப்படுத்துகின்றது. தாயின் பசுமையான நினைவுகளும், பக்குவமான கற்பனைச் சுவையும், எதுகைமோனை சேராத கவிச் சுவையும், பாசத்தை வளர்க்கும் பாங்கான அழகும் கொண்ட பாடல்கள் குழந்தையின் உள்ளத்தில் தூய்மையான சிந்தனையை வளர்க்க உதவுகின்றன.

**''ஆராரோ... ஆரிவரோ**
**ஒரொரோ... ஓரகண்டே**
**ஆரா... ரார~ராராரோ**
**ஆராரோ... ஆராரோ...**
**ஆரிரரோ''**

என ஆரம்பிக்கும் தாலாட்டின் மூலம் பிள்ளையை அழைக்கின்ற பண்பான சில வார்த்தைகள் அக் குழந்தையைக் களிப்பூட்டக் கூடியதாகவும் குழந்தையின் மனக்கருவில் சந்தோஷத்தை ஏற்படுத்தி தாய், சேய் பாச உணர்வைத் தூண்டும் சக்தியாகவும் விளங்குகின்றது.

உதாரணம் :

**என் கண்ணே! என்**
**கண்மணியே!**
**பூவே! பூமலரே!**
**சந்தனப்பூமேனியரே!**
**செல்வமகனே! கற்பகமே!**
**பொன்னே பொக்கிஷமே**
**பொன்மகனே**
**மானே! மயிலே!**
**வளர்பிறையே!**
**வாடாத**
**பூவே! மானீன்ற கன்றே**
**தேடாத திரவியமே**
**மயில் பொரிச்ச நற்குஞ்சே**

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். இப்படியான முன்னிலைப் பெயர்களின் பொருளை, விழிப்பை குழந்தை அறிய அறிய தானும் சிறந்த பண்பான குழந்தையாக ஆவதற்கும் தாலாட்டு மூலவேராக விருக்கிறது. குழந்தை ஓரளவு வளர்ந்த பின ஆனால் நடக்க முடியாத பருவத்திற்கு முன்பாக, தவளும் பருவத்தில் அக்குழந்தையை சந்தோஷப்படுத்துவதற்காக பல விளையாட்டுக்களை நாட்டார் பாடலுடன் தாய் சொல்லிக் கொடுப்பாள். தாயின் பாட்டுக்கு குழந்தை சில அசைவுகளையும் காட்டிக் கொடுப்பாள். இந்நிகழ்வே நாட்டார் பாடல்களில் அதிமுக்கியமான குழந்தையின் உடல், உள வளர்ச்சிக்கு பெரும் பங்கை வகிக்கின்றது.

இது எந்தத் தாயும் தெரிந்து கொண்டு விளையாட்டாக நாட்டார் பாடலைப் பாடியதாக எந்த ஆய்வுகளும் கூறியதாக இல்லை. ஆனால் அவள் பாடுகின்ற நாட்டார் பாடலின் ஊடாக அவளுக்குத் தெரியாமலே குழந்தை உடல் - உள பயிற்சியைப் பெறுகின்றது எனத் திடமாகக் கூறலாம். அது எவ்வாறு எனப் பார்க்கலாம்.

பிள்ளை சிரித்து விளையாடும் போது தாய், சகோதரர்கள், தந்தை, பாட்டன், பாட்டி ஆகியோர் பிள்ளையுடன் சேர்ந்து செல்லங் கொஞ்சுவார்கள். பிள்ளை சாய்ந்தாடும், தலையசைக்கும், கைகொட்டும், சந்தோஷத்தால் மனம் சிரிக்கும். 'தலையாட்டி வந்தான் தலையாட்டி' என்று பாட குழந்தை தலையை ஆட்டி விளையாடும் அப்பொழுது தலைப் பயிற்சி பெறுவதை அவதானிக்க முடிகிறது.

'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' என்ற பாடலையும், 'ஆனை ஆடுவான் தம்பி ஆனை ஆடுவான்' என்ற பாடலையும் பாடும்போது குழந்தை காலை மடித்து இருந்து விளையாடிக் கொண்டு இடுப்புக்கு மேற்புறத்தே உள்ள பகுதி முழுவதையும் அசைத்து இசை ஓசைக்கேற்ப சாய்ந்தாடும். தாயின் கனிவான ஓசை மிகுந்த இசையும் குழந்தையை மனமகிழக்கூடிய நிலையில், முன்னிலைப் பெயர்களினால் குழந்தையை விழித்துப் பாடுவதினாலும் சாய்ந்தாடும்போது களைப்பின்றி சிரித்துக் கொண்டு விளையாடும். இதனால் உள்ளத்தில் ஏற்படும் குதுாகலம் மன வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் சாய்ந்தாடும்போது ஏற்படும் உடற்பயிற்சி, உடல் வளர்ச்சிக்கும் உந்து சக்தியாகவும் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு பலவிதமான பாடல்கள் மூலம் குழந்தை தவழும் பிராயத்தில் நாட்டார் பாடலூடாக உடல், உள மேம்பாட்டினைப் பெறுகிறது. ஆனால் இப்பாடலைப் பாடும்போது அக்குழந்தையின் அசைவை ரசிக்கும் நோக்குடனேயே பாடப்பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தை நடக்க ஓடி விளையாடக்கூடிய பருவத்தை அடைந்தவுடன் விளையாட்டிற்கான நாட்டார் பாடல்கள் பெருவாரியாகவுள்ளன. ஒவ்வொரு பாடல்களுடனும் தொடர்பான விளையாட்டுக்கள் உடலிலுள்ள சகல அங்கங்களுக்கும் பயிற்சி கொடுக்கக் கூடியனவாகவே உள்ளன. பாடசாலைகளில் சென்று பயிற்சி வகுப்பு நடத்தி குறியிட்டு சொல்லி பயிற்சி வழங்குவது அக்காலத்தில் இல்லை. திண்ணைப் பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களுக்கு ஏது உடற்பயிற்சி வகுப்புக்கள் இருக்கும். எப்பொழுது கிராமிய வாழ்க்கை முறைகள் அருகி சிதையத் தொடங்கியதோ அதன் பின்புதான் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை பாடசாலையில் பாடங்களாக வகுத்துக் கற்பிக்கவேண்டிய அவசியமேற்பட்டது. இவ்வவசியம் ஏற்படுவதற்கு முன்பு கிராமிய வாழ்க்கை முறையோடு உடல் - உள வளர்ச்சிக்குத் தேவையான கூறுகள் கலந்து காணப்பட்டன.

கிராமத்துச் சூழலில் பூத்துக் குலுங்கும் பூக்களையும், காய்களையும், கனிகளையும், பாடிப் பறக்கும் பறவைகளையும், ஓடித் திரியும் மிருகங்களையும், உலவித் திரியும் பிராணிகளையும், ஓங்கி நிற்கும் மரங்களையும், மலைகளையும், சுனைகளையும் ரசித்துப் பாடிய பாடல்களாகவே நாட்டார் பாடல்கள் மிளிர்கின்றன. இப்பாடல்களில் குழந்தைகளின் விளையாட்டின் தன்மைக்கேற்ப பாட்டின் ஓசையுடன் விளையாடிய குழந்தைகள் களைப்பின்றி நீண்ட நேரம் விளையாடினர். இப்பருவத்துக்கான விளையாட்டுக்கள் பலவுள்ளன. அவற்றில் பூப்பறித்தல், பூமதித்தல், கண்பொத்தி விளையாடுதல், கலியாணம் பேசுதல், புள்ளிப்பீங்கான், மட்டைக்குடில் கட்டி விளையாடல், மாஸ் கொட்டை தெத்துதல், பறவை விளையாடல், கண்ணாமூச்சி காங்காம் புளம், கீச்சு கீச்சுத் தம்பலம், ஊசாவாசா, பொறுக்கி விளையாடல், அப்படா விளையாட்டு, கிட்டியடித்தல் என்பன குழந்தைப் பருவத்துக்குரிய விளையாட்டுக்களாகும்.

இந்த விளையாட்டு ஒவ்வொன்றுக்கும் பாட்டுக்கள் உள்ளன. உதாரணமாக ஒரு சில விளையாட்டுக்களை நோக்குவோம். குழந்தைகள் வட்டமாக நின்று துள்ளிக் குதித்துக் கொண்டு பின்வருமாறு பாடுவார்கள்.

**''மூசா மூசாப் பள்ளியிலே**
**முப்பத்திரண்டு தென்னமரம்**
**காய்க்கும் பூக்கும் கலகலக்கும்**
**காக்கா நிக்காரு கொப்பிலே''**

இதனால் வியர்வை சிந்துமளவுக்கு உடற்பயிற்சி பெறுவர். அத்துடன் பாட்டுக்களைப் பாடுகின்ற, சொற்களை உச்சரிக்கின்ற பயிற்சியையும் பெறுவர்.

குழந்தைகள் வட்டமாகத் தரையில் குந்திக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது ஒரு குழந்தை தன் கையில் ஒரு கொத்தை வைத்துக்கொண்டு குந்தி இருக்கும். குழந்தைகளைச் (சில இடங்களில் திரியை வைத்திருக்கும்) சுற்றி வட்டமாக ஓடுவார். ஓடும்போது பாடும் பாடல்,

**''கொத்திருக்கோ கொத்து**
**என்ன கொத்து ஆலிங்கொத்து**
**போட்டுட்டுப் போங்க''**

இவ்வாறு கேள்வியும் பதிலுமாக பாட, குந்தியிருக்கும் குழந்தைகளில் எவராவது ஒன்றுக்குப் பின்னால், கொத்தை வைத்து இருக்கும் குழந்தை வைத்துவிட்டு ஓடி இருக்கும். பின்பு கொத்து வைத்திருக்கும் குழந்தை திரும்ப ஓடிச் சுற்றுவார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஓடுவர். இது ஓட்டப் பயிற்சிக்கு மிகவும் சிறந்த விளையாட்டாகும்.

இரும்புக் கோட்டம் உடைத்தல் விளையாட்டுச் சிறுவர்களுக்கு உகந்த விளையாட்டாகும். சிறுவர்கள் சுற்றி வட்டமாக நிற்பார்கள். வட்டத்திற்கு உள்ளே ஒருவரும் வெளியே ஒருவரும் நிற்பார்கள். வெளியே உள்ளவர் உள்ளே நிற்பவரைப் பிடிக்க வேண்டிப் பின்வரும் பாடலை பாடி ஓடி சுற்றி வருவார்.

**சங்கிலி புங்கிலி கதவத்தொர**
**ஏன்மாறறேன் தேங்காய்புலி**
**பசுமாட்டைக் கண்டியா**
**இல்லை**
**ஓ..... ஓ..... எங்கே**
**வீட்டுக்குள்ளே**
**ஒடைக்ககேலுமா?**
**ஒடைக்கேலாது**
**என்னவேலி இரும்புவேலி**

அத்துடன் பலவந்தமாக உடைத்து உள்ளே நிற்பவரை துரத்தி ஓடிப்போய் பிடிக்க வேண்டும். இவ்விளையாட்டுப் போன்றதே "பசுவும் - புலியும்" விளையாட்டு. இவ்விளையாட்டின் மூலமும் குழந்தைகளுக்கு நல்ல ஓட்டப் பயிற்சி தேகப் பயிற்சி போன்றவை கிடைக்கின்றன.

குழந்தைகள் பறவைகள் போன்று கையை அசைத்துப் பாடி விளையாடுவார்கள். தரையில் அமர்ந்து கொண்டு தங்கள் கரங்களைப் பறவைகள் சிறகுகளை ஆட்டிப் பறப்பது போல் ஆட்டி ஆட்டிப் பாடுவார்கள் பாடும் பாடலானது,

**ஆலாப்பற ~ பற**
**அழகு பற ~ பற**
**கோழியே பற ~ பற**
**கொக்கே ~ பற**
**குருவியே பற பற**

வேறுமுறையிலும் பாடல்கள் உண்டு. இவ்வாறு கையசைச்சு பாடி ஆடும்போது முழுமையான உடற் பயிற்சியைப் பெறுகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு விளையாட்டிலும் உடல் - உள மேம்பாட்டுக்கான கூறுகள் இடம் பெறுகின்றன. இவ்விளையாட்டுக்கள் பாட்டினோடு தான் இடம் பெறுகின்றன. எனவே நாட்டார் பாடல்களினூடாகக் குழந்தைகள் உடல், உள மேம்பாட்டைப் பெறுகின்றனர் எனலாம்.

செ. மெற்றாஸ் மயில்

# வருங்காலத்தில் நாட்டின் தலைவர்களாகத் திகழப்போகும் மழலைச் செல்வங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவோம்

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(அதிபர் - பலாலி
ஆசிரிய கலாசாலை)

ஒரு மனிதன் வாழ்க்கையில் பெறும் செல்வங்களில் மிக உயர்ந்த செல்வமாகக் கருதப்படுவது மக்கட் செல்வமே ஆகும். ஒரு நாட்டின் சீரும் சிறப்பும் பேரும் புகழும் அந்நாடு பெற்றெடுத்த நன்மக்களைப் பொறுத்தே அமையும். ஒரு குழந்தையைப் பெற்றுச் சமூகத்திற்கு தருவது தாயின் கடமை, அப்பிள்ளையைச் சான்றோனாக்குவது தந்தையின் கடமை, நல்ல பிரஜையாக அவனை வாழவைப்பது அரசனின் கடமை என்பதை,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே"**

எனச் சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய புறநானூறு கூறுகிறது. குழந்தைச் செல்வத்தைப் பெற்றோரே பெற்றோர் ஆவார். பல ஏக்கர் நிலத்தையும் மாடி வீடுகளையும், கோடிக் கணக்கான பணத்தையும் பெற்றிருந்தாலும் அவர்கள் பெற்றோர் ஆகார். விரும்பினால் அவர்களை இலட்சாதிபதி என்றோ கோடீஸ்வரர் என்றோ அழைக்கலாம். குழந்தைச் செல்வம் இல்லாதவர்களின் வாழ்வு குறை வாழ்வு, அரைவாழ்வு என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பியின் பின்வரும் புறநானூற்றுப் பாடல் தெளிவாக விளக்குகிறது. படைப்பும் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப்பருஞ் செல்வராயினும் இடைப்படக் குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும் நெய்யுடையடிசில் மெய்பட விதிர்த்தும் மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறு இல்லைத் தாம் வாழும் நாளே.

## மழலையின் சிரிப்பு

செல்வம் இன்பத்தைக் கொடுப்பது போலப் பொருள் புகழைக் கொடுக்கும் மக்கட் செல்வம் இந்த இரண்டையும் தரும் சிறப்புடையதாகும்.

**"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை**
**அறிவறிந்த மக்கட்பேறு அல்லபிற"**

எனத் தமிழ் மறையாகிய திருக்குறள் இதனை விளக்குகிறது. மழலையின் சிரிப்பு தெய்வத்தின் சிரிப்புக்கு சமன் ஆகும். தம்முடைய குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேளாதவர்கள் குழலிசையும் யாழிசையும் இனிமையாக இருக்கின்றது எனக் கூறுவார்கள்.

**"குழலினிது யாழினிது என்பதும் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்"**

என்றே திருக்குறளும் பகர்கிறது. மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் அனைத்தையும் நீக்கி உயர்வைத் தருவது குழந்தைச் செல்வமே என்பதைச்

**சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா**
**செல்வக் களஞ்சியமே என்னைக்**
**கலி தீர்த்தே ~ உலகில்**
**ஏற்றம் புரிய வந்தாய்**

என மகாகவி பாரதியார் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

## ஆரம்பக்கல்வி ஒழுங்காக அமைய வேண்டும்

''கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை" என்ற கருத்தை ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. மனித சமுதாயம் முழுவதும் பட்டினியிலிருந்தும், நோயிலிருந்தும், அறியாமையிலிருந்தும் முற்றாக விடுதலை பெறவேண்டும் என்றே பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் தந்தையாகிய கார்ல்மாக்ஸ் குறிப்பிடுகிறார்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பது பழமொழி. ஐந்தில் வளைத்துவிட்

(07ம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல

## தற்போது தப்ப முடியுமா?

"அடி உதவுகிற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவுவதில்லை'' என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அது அந்தக் காலத்தில் சரியாகஇருந்ததோ என்னவோ, இந்தக் காலத்தில் அது சரிவராது சார்: இந்தக் காலத்திலே அண்ணன் தம்பியும் உதவுவதில்லை. அடியும் உதவுவதில்லை. ஒரு குற்றவாளியை விசாரிக்கிறார்களென்று வைத்துக் கொள்ளுங்கள், இந்த ஆள் அடிக்கு பயந்து கொண்டு உண்மையைச் சொல்லி விட்டால் பரவாயில்லை. ஆனால் அப்படி எல்லாரும் சொல்லி விடுவதில்லையே! அதனாலேதான் வேறு வகையான முயற்சிகள் பண்ண வேண்டியிருக்கிறது. காலம் மாற மாறக் குற்றவாளியும் மாறிக் கொண்டிருக்கிறார். குற்றவாளியை கண்டு பிடிக்கிற முறையும் மாறிக் கொண்டிருக்கிறது:

லண்டனில் ஒரு லொறியை ஒரு கொள்ளைக் கும்பல் வெகு சாமர்த்தியமாகக்கடத்திக் கொண்டு போய் விட்டதாம். கடத்திக் கொண்டு போகிற அளவுக்கு அந்த லொறியில் என்ன இருந்ததென்றால் - 3 லட்சம் பவுண் அதாவது சுமார் 96 லட்சம் ரூபா பெறுமானமுள்ள சிகரெட்டுக்கள் அந்த லொரியில் இருந்ததாம். அதனால் கடத்திக் கொண்டுபோய் விட்டார்கள். வெகு தூரத்துக்கு லொரியை ஓட்டிக் கொண்டு போய் விட்டார்கள். இனிமேல் பொலிஸால் நம்மை நிச்சயம் கண்டு பிடிக்க முடியாதென்று உறுதியாக நம்பினார்கள். ஆனால் அந்த உறுதி உடைந்து போனது. எங்கேயிருந்தோ திடீரென்று பொலிஸ் வந்து வளைத்துக் கொண்டது. சினிமாவில் நடப்பது போன்று,

ஆசாமிகளெல்லோரும் அகப்பட்டுக்கொண்டார்கள். இது எப்படிச் சாத்தியமானது தெரியுமா? எல்லாம் கொம்பியூட்டர் உபயம் தான், அந்த லொறியில் ஒரு சிறிய டிரான்ஸ் மீட்டர் இருந்ததாம், லொறியைக் கடத்திக் கொண்டு போனவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது அந்த டிரான்ஸ் மீட்டர் தொடர்ந்து சிக்னல்களை வெளிப்படுத்திக் கொண்டே இருந்ததாம். லொறி எந்தெந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிற தென்ற தகவலை அனுப்பிக் கொண்டே இருந்ததாம். அதனால் சுலபமாகப் போய் அவர்களை வளைத்துப் பிடிக்க முடிந்ததாம்.

லொறியில் இது போன்று ஒரு டிரான்ஸ் மீட்டரைப் பொருத்திப் பயன்படுத்தும் முறைஇருக்கிறதே. டட்டாரக் என்று பெயர் சொல்கிறார்கள். இந்த முறையிலே தான் சிகரெட் லொறியை உடனடியாக கண்டு பிடித்துமீட்டிருக்கிறார்கள். இந்த முறையை வேறு எந்தெந்த வகையில்உபயோகப்படுத்தலாம் என்றும் யோசித்துப் பார்த்து கொண்டிருக்கிறார்கள். இது எப்படியென்றால், வாகனங்களில்ஒரு சிறிய கொம்யூட்டரைப் பொருத்த வேண்டியது. அது நாடு முழுவதிலும் உள்ள டிரான்ஸ் மீட்டர்களிலிருந்து சிக்னல்களை வாங்கிக்கொண்டிருக்கும். வாகனத்திலிருக்கிற கொம்யூட்டர் இந்த சிக்னல்களைப் பயன்படுத்தி ஒரு வரைபடத்தில் லொறி அவ்வப்போது இருக்கிறஇடத்தை தொடர்ந்துகுறிப்பிட்டுக்காட்டிக் கொண்டேயிருக்கும்.

கேந்திர நிலையங்கள் இந்தத் தகவலை வைத்து வாகனம் எங்கேயிருக்கிறது என்று ஒரு சில வினாடிகளில்சொல்லி விடும். இந்த முறையிலேதான் லண்டனில்கடத்திக்கொண்டு போன லொறியைக் கண்டு பிடித்து விட்டார்கள். இந்தக் கடத்தல் என்கிற குற்றம் ஒவ்வொரு ஊரில் ஒவ்வொருவிதமாக நடக்கும். அதை ஒவ்வொருவிதமாகக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிசெய்வார்கள். இடத்துக்கிடம் அது வித்தியாசப்படும் நமது ஊரில் சிறுசிறு பொருள்களை கடத்திக் கொண்டு போகிறார்கள் சார்!

வேறு ஒன்றும் வேண்டாம் ஒரு சின்ன அலுவலகத்தில் வரவுப்பதிவேடு ஒரு மேசை மேல்வைத்திருந்தார்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர்கள் எல்லோரும் அதில் கையெழுத்துப் போட்டுவிட்டு உள்ளே வரவேண்டும். கையெழுத்துப் போடுவதற்கு வசதியாக அதற்குப்பக்கத்தில் ஒரு பென்சிலும் வைத்திருந்தார்கள். கையெழுத்துப் போட்டவுடன் அந்தப் பென்சிலை திருப்பி அந்தஇடத்தில் வைத்து விடுவது தானே மரியாதை அப்படிவைப்பதில்லை கையோடு எடுத்துக்கொண்டு போய் விடுவது. இப்படிஇந்தப் பென்சில் கடத்தல் அடிக்கடி நடந்து கொண்டிருந்தது. புதிது புதிதாக பென்சில்வைத்துப் பார்த்தார்கள் கட்டுப்படியாகவில்லை.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் அந்த அலுவலகத்துக்கு அதிகாரியாக வந்து சேர்ந்தார். என்னிடம் இந்த விஷயத்தைச் சொன்னார். 'எல்லாருக்கும் எதுஎதற்கோ யோசனை சொல்கிறாயே, இதற்குஒருயோசனைசொல்லலாமே!' என்றார். நான் நன்றாக யோசனை செய்து, ஒரு ஐடியா கொடுத்தேன். 'இனிமேல் பென்சிலைத் தனியாக வைக்காதீர்கள். அதை ஒரு நூலால் கட்டி அந்தவரவுப் பதிவேட்டுடன் சேர்த்துக் கட்டி விடுங்கள். நூல்பலமானதாக இருக்க வேண்டும். ஒரு முனையில் பென்சில், மறு முனையில் பதிவேடு. எப்படி என் ஐடியா என்றேன். 'அபாரம்' என்றார்.

அது மாதிரியே செய்து விட்டார். பின்னர் கொஞ்சநாள் கழித்து அவரைப் பார்த்தேன் 'எப்படிசார், என்ஐடியா சரியாக வந்ததா? இப்போதும் பென்சிலை யாராவது கடத்துகிறார்களா?' என்று கேட்டேன். அவர் ஒரு மாதிரியாக என்னைநிமிர்ந்துபார்த்தார். 'இப்போது யாரும் பென்சிலைக் கடத்துவதில்லைசார். அத்துடன் பதிவேட்டையும் சேர்த்துக் கடத்திக் கொண்டு போய் விடுகிறார்கள் சார்' என்றார். ஏன்பென்சிலில் கூடவா டிரான்ஸ் மீட்டரை வைக்க முடியும்.?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வருடாந்த உற்சவம்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

10 தினங்கள் இடம் பெறவுள்ள உற்சவ காலத்தில்தேர் தீர்த்தம் ஆகியன முறையே 21, 22 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன. (உ-120)

## இயேசு ஆலயம் திறப்பு

(கொழும்புத்துறை)

உடுவில் கந்தரோடை பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குழந்தை இயேசு ஆலயம் நேற்றுமாலை 5 மணிக்கு திருப்பலியுடன் திறந்து வைக்கப்பட்டது.

(உ-262)

### புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்கள்

# பூரணமாக நிறைவேறும் வரை

# பேச்சுக்குப் புலிகள் தயாரில்லை

### வலிமேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழவன் தெரிவிப்பு

(உடுவில்)

'எந்த நேரத்திலும் எதனையும் எதிர் கொள்ளும் பலத்துடனே சமாதான முயற்சிகளுக்கு வந்துள்ளோம். போரென்றால் போர் சமாதானமென்றால் சமாதானம், இதனைத் தீர்மானிக்கும் பொறுப்பு மக்களாகிய உங்களிடமே உண்டு' இவ்வாறு தெரிவித்தார். வலிகாமம் மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழவன்.

கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்ற தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நிர்வாகிகளுக்கான கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தனதுரையில் 'இந்தச் சமாதானசூழல்எமது போராட்ட வரலாற்றில் ஒரு பொற்காலம். இந்தப் பொற்காலத்தை பயன்படுத்தி எமது மக்கள் தமது உரிமைகளை வெகுஜன போராட்டங்கள் மூலம் வென்றெடுக்க முன்வர வேண்டும்.

அரசின் சமாதானத்தின் மீதான இந்த அக்கறை எமது பலத்தினதும் அரசாங்கத்தின் பலவீனத்தினதும் வெளிப்பாடேயாகும் இந்தப்பலத்தை நாங்கள் பெறுவதற்கு 17ஆயிரத்துக்கும்அதிகமானமாவீரர்களை காணிக்கையாக்கியிருக்கிறோம்.

புரிந்துணர்வுஉடன்படிக்கையின்கடைசிசரத்து நிறைவேற்றப்படும் வரை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு போவதற்கு நாங்கள் தயாராயில்லை என்று கூறினார்.

யாழ். மாவட்ட கல்வித் துறைப்பொறுப்பாளர்இலக்கியன் தனதுரையில் 'இவ்வாறான சங்கங்களை அமைப்பது நாங்கள் பொது மக்களிடமிருந்து வரிவசூலிக்கவோநிதி சேகரிக்கவோ இல்லை எமது சுயநிர்ணய உரிமைக்கான குரலை ஒட்டு மொத்தமாக ஓங்கி ஒலிப்பதற்கே ஆகும்.

பலமஇல்லாத இனம்வாழ்ந்ததாக வரலாறு இல்லை. எனவே இவ்வாறானநடவடிக்கைகள் மூலம் எமது பலத்தை கட்டியெழுப்ப வேண்டும்' என்றுதெரிவித்தார். (உ-261)

## சமாதானத்தை ஏற்படுத்தும் தகுதி பிரதமருக்கு உண்டு

### மன்னார் மக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரேயொரு தகுதிவாய்ந்த தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே.

இவ்வாறு மன்னார் மாவட்டத்திலிருந்து சமாதானயாத்திரை ஒன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்பு சென்றுள்ள பொதுமக்கள் குழுவினர் விளையாட்டுத் துறை அமைச்சர் ஜோன்சன் பெர்ணாண்டோவை சுகததாஸவிளையாட்டரங்கில் சந்தித்தபோதே தெரிவித்துள்ளனர்.

அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதை தொடர்ந்து, வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மக்கள் எவ்வித இடையூறுகளும் இன்றி வாழ்ந்து வருகிறார்கள் என அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துள்ளார். (உ-8)

## கட்டடம் அமைக்க முன் அனுமதி பெற வேண்டும்

(சுதுமலை)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலி, கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் பிரதேச சபையின் முன் அனுமதி பெறாது கட்டடங்கள் அமைத்தஅதன் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தும் கடிதங்கள கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டன.

எந்த ஒரு கட்டிடத்தையும் புதிதாகஅமைப்பதற்கு முன்னரும் அல்லது அதில் சிறுமாற்றம் செய்வதற்கோ அல்லதுமுற்றாக மாற்றம் செய்வதற்கோ கட்டட பிரதேச சபையில் விண்ணப்பம் பெற்று பூரணப்படுத்திய பின் சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் முன் அனுமதி பெறப்பட்டு கட்டடம் அமைக்க வேண்டும், அல்லது மாற்றம் செய்ய வேண்டும்.

அனேகமானவர்கள். தாம் நினைத்தபடிஅனுமதிபெறாது கட்டடங்களை அமைப்பதால் பொதுமக்களிடம் இருந்தும் பல அரச நிறுவனங்களில் இருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன எனவும் நல்லூர் பிரதேச சபையின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-252)

## இலங்கை தாதிமார் மன்றம் அடுத்த ஆண்டு அமைப்பு

(கொழும்பு)

இலங்கை தாதிமார் மன்றம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் அமைக்கப்படவுள்ளது.

தாதிமார்களின் அங்கத்துவத்தைப் பதிவு செய்தல் மற்றும் அவர்களின் தொழில் அபிவிருத்தி உட்பட பல விடயங்களை கருத்தில்கொண்டே இம் மன்றம் அமைக்கப்படவுள்ளது.

இம் மன்றத்துக்கான அங்கத்தவர்கள் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் டிசம்பர் மாதம் தெரிவு செய்யப்படவுள்ளனர் என சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் புத்திக்க விஜயரத்தின, உயரதிகாரிகள், அரசாங்க சேவை தாதிமார் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தகைய மன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என அரசாங்க சேவை தாதிமார் சங்கம் பல வருடங்களாக வற்புறுத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன்

## மருதங்கேணிப் பகுதியில் 9 பாடசாலைகள் புனரமைப்பு

(திருநெல்வேலி)

ஆசிய அபிவிருத்தி வங்கி, வடக்கு-கிழக்கு சமூக மீளமைப்பு செயல் திட்டத்தின் கீழ் (நிகோட்) புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மருதங்கேணிப் பகுதியில் 9 பாடசாலைகளைப் புனரமைக்கவென 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதன் கீழ், உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு 10 மில்லியன், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரக் கல்லூரிக்கு- 7 மில்லியன், ஆழியவளை சி. சி. த. க. பாடசாலைக்கு- 6.6 மில்லியன், மருதங்கேணி இந்து வித்தியாலயத்திற்கு- 4.5 மில்லியன், செம்பியன்பற்று அ. த. க. பாடசாலைக்கு- 3.7 மில்லியன், தாளையடி றோ. க.த.க. பாடசாலைக்கு- 3.5 மில்லியன், கட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலைக்கு 2.1 மில்லியன், மாமுனை அ. த. க. பாடசாலைக்கு- 2 மில்லியன், கேவில் அ. த. க. பாடசாலைக்கு 1.8 மில்லியன் என்ற ரீதியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதி மூலம் மேற்படி பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் அதிபர் விடுதி, குடிநீர்வசதி, மலசல கூடங்கள்அமைப்புஆகியபணிகள் அடுத்தமாத முற்பகுதியின் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை, சம்பந்தப்பட்ட 9 பாடசாலைகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று நேரில் சென்று பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-43)

## நுளம்புக் கட்டுப்பாட்டு நிகழ்வுகள்

(மானிப்பாய்)

வலி மேற்கு பிரதேச சபையின் நுளம்புக் கட்டுப்பாடு, டெங்கு ஒழிப்புநிகழ்வுகள்இவ்வாரம் வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம், சங்கானைப் பகுதிகளில இடம் பெறவுள்ளன. (உ-232)

## சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் ஆலயப்பூசையைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு மன்றத்தின் தேவாரப் பாடசாலையான நல்லூர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகங்களின் பாராயணம் மற்றும் சொற்பொழிவுகள் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஷ)

## செயற்கை. .

விதை உருளைக் கிழங்கு

தை தொடக்கம் பங்குனி வரை உள்ளூர் உருளைக் கிழங்கு சந்தைககு வரும். இது ஒரு வரவேற்கத்தக்க உள்ளூர் முயற்சி, இதற்குத் தேவையான விதை கிழங்கு நெதர்லாந்து போன்ற வெளிநாடுகளிலிருந்து வருகிறது. பல இரசாயனங்களில் பதனிடப் பட்டே இவை எம் தேசத்தை அடைகின்றன. பெட்டி உடைத்தவுடன் மண்ணில் நாட்டத்தக்கதாகவே இவை வருகின்றன. ஆனால் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் காசே கடவுளாய்க் கொண்ட சிலர் மருந்தேற்றப் பட்ட விதை உருளைக் கிழங்கையும் விற்றுக் காசாக்குகிறார்கள. அருமைக் காலத்தில் பெருமையாகச் சாப்பிடுவோர் இக் கிழங்குகளின் மூலம் விஷம் உட்செல்வதை அறிந்தால் வருங்காலத்தில்இவ்வாறானவற்றை வாங்கார் என நம்பிக்கை கொள்ளலாம்.

தற்போது யாழ் நகரப் பகுதிகளில் சில விற்பனை நிலையங்களில் வாடாமல் வதங்காமல் பொலிவோடுவிற்பனைக்கு இருக்கும். கொழும்புத் தோடையும், அப்பிளும் எமமவர்களைக் கவர்ந்திழுப்பதில் வியப்பில்லை. ஆனால் எவ்வாறு இவை வாடாமல் இவ்வாறு கவர்ச்சியாக தோற்றமளிக்கின்றன என்பது தெரிந்திருகக நியாயமில்லை. இது பற்றி நான் விசாரித்த போது இவை கண்ணுக்குப் புலப்படாத,மெல்லியபிளாஸ்ரிக்கால் கவரிங் செய்யப்பட்டு கொழும்பிலிருந்து வருவதாக அறிய முடிந்தது. தோலுடன் இவற்றை உண்ணும்போது இவை ஏற்படுத்தும விளைவுகள் அபாயமானவை.

இந்த ஆபத்துச் சங்கிலி இத்துடன் முடியவில்லை. ஊர்களில் பல சரக்குக் கடைகளில் விற்கும் பொருட்களின் பட்டியல மா;சீனி, அரிசி எனத் தொடங்கி சில்லறைச்சாமான்கள ஊடாக மலத்தியோன், மண்ணெண்ணெய் வரை நீளும். அன்றாடம் பாவிக்கின்றமரக்கறிகளும் இவற்றில் பொதுவாக உடைக்கப்பட்டு இருக்கும். இக் கடைகளில் மனிதனின் கவனயீனத்தாலோ அல்லது எலிபோன்ற இராப் பிராணிகளாலோ இரசாயனப் பதார்த்தங்க உணவுப் பொருட்களுடன் கலக்கப் படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். இவ்வாறான பொருட்களை வாங்கும்போது நாம் எச்சரிக்கையாக இருத்தல் மிகவும் அவசியமாகும்.

வீடுகளிலும் கூட வாங்கி வந்த காய்கறிகளைப் பூச்சி மருந்துகள, மண்ணெண்ணெய் போன்றவற்றுடன் சேர்த்துக்களஞ்சியப் படுத்தி வைத்திருப்பார்கள். இவை தவறுதலாகவோ வேறு முறைகளிலோ கலக்கப்படக் கூடிய வாய்ப்புகள் அதிகம். உரிய முறையில் களஞ்சியப் படுத்துவதன் மூலம் இவ்வாறான சேதங்களை நாம் தவிர்க்கலாம். உரிய முறையில், பலமுறை நீருள்காய்கறிகளைக் கழுவுவதன் மூலம் அவற்றிலுள்ள நஞ்சுகளைப் பெருமளவில் அகற்றலாம். பச்சையாக உண்பதைத் தவிர்ப்பதன் மூலமும் நாம இவற்றின் பாதிப்புகளிலிருந்து ஓரளவு எம்மைப் பாதுகாக்கலாம். அத்துடன் செயற்கை இரசாயனங்களின் பாவனைக்குள்ளாகாத, காய்கறிகளை பயன்படுத்துவது சாலச்சிறந்தது. குத்தகை இல்லாத சுத்திகாய வாங்குவதென்று கூறி,அதிக விலை கொடுத்து இரசாயனங்கள் சேர்ந்த காய்கறிகளை வாங்குகிறோம்.

நோய் நாடி, நோய்முதல் நாடி எப்பிரச்சினையை அணுகினலும் அது பலன்தரும். விவசாயிகளின் எண்ணங்களிலும் நடவடிக்கைகளிலும் ஏற்படும் மாற்றங்கள் மூலம் எதிர்கால விவசாய நடவடிக்கைகள் மாற்றியமைக்கப் பட்டால், பாரிய அளவிலான திருப்பங்கள் ஏற்படவாய்ப்புண்டு. மேலும் விவசாய இரசாயனங்களின் பாவனைபற்றிய சரியான தகவல்களை உரிய முறையில் வெளிக்கொணர்தல் மூலமும், உள்ளூர் விவசாயக் கழகங்கள் கருத்தரங்குகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமும் இவ்விலக்கை எட்ட முடியும். அத்துடன் செயற்கை இரசாயனங்களின் பாவனையை மட்டுப்படுத்திஇயற்கை உரங்களின் பாவனை வலியுறுத்தப்பட வேண்டும். விவசாயிகள் மட்டுமல்லாது, உணவு களஞ்சியப்படுத்துவோர். விநியோகஸ்தர்கள்' வியாபாரிகள்,நுகர்வோர் போன்றோரும் உணவுப் பொருட்களில் இரசாயனக் கலப்பு ஏற்படாது இருப்பதற்காக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.எனவே,எமது உணவில் விவசாய இரசாயனங்களின் சேர்க்கையைத் தடுப்பதற்கு மிகவும் சிறந்த வழி வீட்டுத் தோட்டம் அமைத்தலாகும். குரோட்டன் களையும் வேறு பயனற்ற அழகு மரங்களையும் பிடுங்கிவிட்டு உங்கள்முற்றத்தை கத்தரி,வெண்டி,மீளகாய்ச் செடிகளாலும், வரம்புகளிலுள்ள லில்லி மரங்களைப் பிடுங்கி வெங்காயத் தாள்களாலும், முற்றத்துப் பந்தலை பாகல், பயிற்றை போன்றவற்றாலும் அலங்கரியுங்கள்.

நன்றி
சுகமஞ்சரி

# டிசம்பர் 5 இன் பின் பாராளுமன்றக் கலைப்பு

# ஊகம் அல்லஉண்மைஎன்கின்றனர் அரசியலாளர்

## ஜனாதிபதியின் உரை இதை உறுதிப்படுத்துகிறதாம்

(கொழும்பு)

டிசம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றம் தன்னைத்தானே கலைத்துக் கொள்வதை தவிர்க்கும் விதத்தில் பிரதமரும் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரும் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர். கடந்த செவ்வாயன்று ஒன்றரை மணிநேரம் பேசியதைத் தொடர்ந்து தொலைபேசி மூலமாக பேச்சுக்கள் தொடர்ந்து வருகின்றன.

இதேவேளை, ஜனாதிபதியுடன் தொடர்பு கொள்ள முடியாதபடிஅவருக்கானதொலைபேசி இணைப்புகள் செயலிழந்து விட்டது போலிருப்பதாக பிரதமர் முறையிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கெதிரான அரசியற் குற்றச்சாட்டுப் பிரேரணையை தாக்கல் செய்வதில்லையென்றும் ஆனால் ஜனாதிபதிக்கெதிரான ஏனைய விவகாரங்கள்பற்றிய விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறும்என்றும் பிரதமர் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை,ஒரு அமைச்சரவைக்கு தலைவியாயிருந்து கொண்டு அந்த அமைச்சரவையை கவிழ்ப்பதற்கு எப்படிச் செயற்பட முடியும்?என்றும் இணக்கப்பாட்டுடன் செயற்படும் வாக்குறுதிகளுடன் நம்பிக்கையில்லா பிரேரணைகளும் அலரிமாளிகைக்கு முன் ஆர்ப்பாட்டங்களும் எவ்வாறு திட்டமிடப்படலாம் என்பன போன்ற விபரங்களும் ஆராயப்பட்டன.

டிசம்பர் 5 ஆம் திகதிக்கு பின் பாராளுமன்றத்தை கலைப்பதில்லை என வாக்குறுதியளிக்கும் ஜனாதிபதியின் கடிதமொன்றை பெற்று இந்த இழுபறியை முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் என்று கதிர்காமர் தெரிவித்த யோசனையை பிரதமர் நிராகரித்து விட்டதாகவும் தெரியவந்துள்ளது. கடந்தகால அனுபவங்களினடிப் படையிலேயே பிரதமர் இவ்வாறு நிராகரித்து விட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, காணாமற் போய்விட்ட மங்கள சமரவீரவின் கைப்பைக்குள் ஐ.தே.மு. ஆட்சியை ஒரே நாளில், மாற்றும் யோசனைகள் அடங்கிய ஆவணம் தவிர்ந்த வேறு என்னென்ன ஆவணங்கள இருந்திருக்கலாமென்பது சரியாக தெரியாத நிலையில், அரசியலமைப்பு சதி பற்றிய கதைகளுக்குமறுப்புதெரிவிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக தெரியவருகிறது.

மறுப்பு தெரிவிப்பதுமேலும் சிக்கலை தோற்றுவிக்கலாமென்ற அச்சமே இதற்கு காரணமென்றும் சண்டே லீடர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

டிசம்பர் 5ஆம்திகதிக்குப்பின் பாராளுமன்றத்தை கலைப்பார் என்ற ஊகம் கடந்த வெள்ளியன்று அவர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெளிவாக தெரிகிறதுஎனவும் அரசாங்கத்தை கலைக்கும் உரிமை என்னிடமே உள்ளது என் தையேஅவர்வலியுறுத்தியிருந்தார் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

## வருடாந்த உற்சவம்

(திருநெல்வேலி)

திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (உ)

# தகுதிகாண் பரீட்சை மூலம் பட்டதாரிகளுக்கு நியமனம்

### வன்னி மாவட்ட எம். பி. வற்புறுத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் தகுதிகாண் நேர்முகப் பரீட்சையை நடத்தி, பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் நிஷாத் பதியுதீன்பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கேட்டுக் கொண்டுள்ளார்.

வன்னிப் பட்டதாரி ஆசிரியர்களின் நியமனங்கள் குறித்து அவர் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கேட்கப் பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும், ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தின் கீழ், வழங்கப்பட்ட 743 நியமனங்கள உரிய முறையில் வழங்கப் படாமையினாலேயே அதனை இடை நிறுத்தி, தகுதிகாண் நேர்முகப்பரீட்சை மூலம் நியமனங்களை வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆயிரம் பட்டதாரி ஆசிரிய நியமனத்தின் கீழ் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளன.

வன்னி மாவட்டத்துக்கான பட்டதாரி ஆசிரிய நியமனங்கள் அம்மாவட்டங்களில் உள்ள பட்டதாரிகளை கொண்டே நிரப்பப்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-8)

# பொது நூலகங்கள் தோறும் நூலக அபிவிருத்தி ஆலோசனைக் குழு

(சுதுமலை)

வடக்கு- கிழக்கில் உள்ள மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பவற்றின் கீழ் இயங்கும் பொது நூலகங்களிற்கு - நூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழுவை அமைக்கும் படியும் அதன் விபரங்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவியாளரினால் சிபார்சு செய்த பின் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக தனக்கு அனுப்பிவைக்கும் படியும்- வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களிற்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த ஆலோசனைக் குழுவானது உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும், பொது நூலகங்களை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கும், செயற்படவைப்பதற்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதுடன்,பொது நூலகத்தின் வளர்ச்சிக்காக சிறந்த தொழிற்பாடுகளைச் செய்வது பிரதான பொறுப்பாகும் என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது நூலகத்திற்கு பொறுப்பாக உள்ள நூலகர் இக் குழுவின் செயலாளர் ஆகவும் உள்ளூராட்சி மன்றத் தலைவர் பதவி வழித் தலைவராகவும் இருப்பார். (உ-252)

# மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டிக்கான யாழ்.அணி தெரிவு இன்று

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 19 ஆம் திகதி மாத்தளை தம்புல்லவில் நடைபெறவுள்ள 15, 17 வயது பிரிவுகளுக்கான மாவட்ட மட்ட கிரிக்கெட் போட்டிக்கான யாழ். மாவட்ட அணித் தெரிவு இன்று பி.ப 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்திய கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை அணிகளில் இருந்து முன்னணியில் திகழும் 4மாணவர்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன் பொறுப்பாசிரியர் ஒருவரை இதற்கு அழைத்து வருமாறு யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவர் பி. கமலநாதன் கேட்டுள்ளார். (உ-3)

# கட்சி மாறும் எண்ணம் இல்லை என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அரசு புரிந்து கொண்டுள்ள நிலையில், ஆட்சி அதிகாரத்தை தன்னுடைய பக்கம் மாற்றி அமைப்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சோரம் போகும் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் இருக்க மாட்டாதுஎன அதன் தலைவர்ரவூப் ஹக்கீம்ஏறாவூரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நகர, பிரதேச சபைகளின் பொதுக் கூட்ட வைபவத்தில் பிரதம அதிதியாககலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு முறுகல் நிலை ஏற்பட்டுவிட்டது என எண்ணிக் கொண்டு எதிர்க்கட்சிக்கு தாவிவிட்டால், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என உறுதியாக கூறி விடவும் முடியாது.

அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் நிதானமான முறையில் ஏற்படும் பேச்சுவார்த்தைகளின் தீர்வையே முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கிறது.

அதே வேளை, முஸ்லிம் மக்களின் உண்மை நிலை மறைக்கப்படும் போது, ஊடகங்கள் அனைத்தும் ஊமைகளாக மாறி விடுகின்றன என குற்றம் சாட்டினார்;

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாய அக்கிரமத்தை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்காட்டும் பொறுப்பு தென் பகுதி முஸ்லிம் மக்களையே சாரும்.

இவர்கள் வடக்கு- கிழக்கில் பாதிக்கப்படும் போது ஒழுங்கமைக்கப்பட்ட முறையிலான வெகுஜன போராட்டத்தை தென்பகுதியில் நடத்துவதன் மூலம் சர்வதேச உலகிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துக்கும் அழுத்தங்களை கொடுக்கும் பணியினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கச்சிதமாகவும், நேர்மையாகவும் மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார். (உ-8)

# இந்துமத குருபீடாதிபதி

### நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு ஆன்மீகப்பயணம் செயதசர்வதேச இந்துமத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் நாடுதிரும்பியுள்ளார்

கடந்தமாதம் ஜேர்மனியில் சிவாச்சாரியார் ஆன்மீகப் பெருவிழாவைநடத்தி சமய, சமூக,கலைப்பணிபுரிகின்ற60 பிரமுகர்களை பாராட்டி பொன்னாடைபோர்த்திகௌரவித்தமைகுறிப்பிடத்தக்கது.

மேலும் ஜேர்மனியில் வாழும் மாணவ மாணவிகளுக்கிடையில் சமய அறிவுப் போட்டிநடத்திசித்தி பெற்ற மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கினார். (உ)

# கேள்வி அறிவித்தல்

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.**

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2002ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 03ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள், திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தகுதியுடையோர்மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2002 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| வேலைவிபரம் | பதிவுசெய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| சுகாதாரக் கல்விப் பகுதிக் கட்டடம் அமைத்தல், சு.வை.அ.அலுவலகம், பருத்தித்துறை | எம்-9 | ரூ. 4,700/- | ரூ. 250/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),**
**கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.**

**பிரதம பொறியியலாளர்,**
**யாழ்ப்பாணம்.**
[C/4846]

# வருங்காலத்தில் நாட்டின் . . .

(04ம் பக்கத் தொடர்ச்சி)

டால் ஐம்பதில் வளைவது எளிது ஆகும். அதனால் சின்னஞ்சிறு பருவத்திலேயே சீரிய குடிமக்களாக்குவதற்கு ஏற்ற வகையில் வளர்ப்பதும் பயிற்சி தருவதும் பலன் தரும். நாட்டிற்கும், வீட்டிற்கும் நலந்தரும். ''தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற முதுமொழிக்கு ஏற்ப பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சு விதைகளை விதைக்காமல் அவர்களை வளர்த்துவிட வேண்டிய பொறுப்பு பெற்றோர், ஆசிரியர், சமூக நலன் விரும்பிகள் ஆகிய அனைவருக்கும் உண்டு. ஒரு மாணவனின் கல்விக்கு அத்திவாரமிடுபவர்கள் ஆசிரியர்களே ஆவார்கள். ஆரம்பக் கல்வி ஒழுங்காக அமைந்தால் தொடர்ந்து மாணவன் பெறும் கல்வி சீராக இருக்கும். வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டு பாடசாலைக்கு வரும் மாணவனை அரவணைத்துக் கற்பிப்பதற்கு பெண் ஆசிரியைகளே பொருத்தமுடையவர்கள் என்ற கருத்து கல்வியியலாளர்களிடம் நிலவி வருகிறது. அன்பு, கருணை, தாயுள்ளம், பொறுமை செல்கிறது. பாடசாலைக்குச் செல்ல முன்பு தாயின் அரவணைப்பில் வாழ்ந்த பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பிள்ளை பராமரிப்பு நிலையங்கள் தேவையாக உள்ளது. நமது நாட்டு மக்களில் பலர் வெளிநாடுகளை நோக்கிப் புலம் பெயர்ந்ததால் நம்மவர்களிடம் நிலவிய கூட்டுக் குடும்ப அமைப்பு யாவும் சிதறடிக்கப் பட்டுவிட்டது. இதனால் குழந்தைகளும் வயோதிபர்களும் ஆதரிப்பார் இல்லாமல் திண்டாடுகிறார்கள்.

இன்று மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளை ஆதரித்துக் கல்வி போதிக்கும் நிலையங்களாகப் பாலர் பாடசாலைகள் காண்ப்படுகின்றன. இன்று இலங்கையின் பல பாகங்களிலும், பெரும் எண்ணிக்கையிலான முன்பள்ளிகள், தனியார்களாலும், சில நிறுவனங்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றன. முன்பள்ளிக் கல்வியைப் பெறக்கூடிய வயதில் உள்ள மாணவர்களில் 30% ஆன பிள்ளைகள் மட்டுமே முன்பள்ளிக்குச் செல்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி முன்பள்ளிக் கல்வியில் அரசு அக்கறை எடுத்து செயல்பட ஆரம்பித்துள்ளது. பாலர் கல்வியில் அக்கறை எடுத்துச் செயற்பட்ட கல்வியியலாளர்களில் மொன்ரிசூரி அம்மையார் முதலிடம் பெறுகிறார். பிள்ளைகளின் இயற்கை நிலையில்' அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதன் மூலம் அவர்களைத் திறமைசாலிகளாக வளர்க்கலாம் என்பதை மொன்ரி சூரி அம்மையார் எடுத்துக் காட்டினார். உள விருத்தியில் பின் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு கல்வியறிவு புகட்டுவதில் ஈடுபட்ட அம்மையார் தாம் கையாண்ட கற்பித்தல் முறையில் பெருவெற்றி கண்டார். இந்தக் கற்பித்தல் முறையை சாதாரண குழந்தைகளுக்கும் பலனளிக்கும் வகையில் அம்மையார் செயற்படுத்தினார். குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை இவர் பெரிதும் விரும்பினார். குழந்தைகள் எவருடைய நிர்ப்பந்தமோ குறுக்கீடோ இன்றித் தாமாகவும் சுதந்திரமாகவும் கற்கக்கூடிய சுதந்திரம் உடையதாக பாடசாலை அமைய வேண்டும் என்றார். பிள்ளைகளிடம் இயல்பாகவே அடங்கியிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதே ஆசிரியரின் கடமை என்றார்.

## நாட்டின் தலைவர்கள்

பாலர்களாக மொன்ரிசூரிப் பள்ளிகளிலும், சிறுவர்களாக ஆரம்பப் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களே நாட்டின் தலைவர்களாக நாளை திகழப் போகிறார்கள் இதனை

**"ஏடு தூக்கிப் பள்ளியில்**
**இன்று பயிலும் சிறுவரே**
**நாடு காக்கும் தலைவராய்**
**நாளை விளங்கப் போகிறார்"**

எனக் குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

தாய் தந்தையர் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகள் கல்வியில் நாட்டமும் அக்கறையும் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை பாரதிதாசனின் பின்வரும் பாடல் வரிகள் விளக்குகிறது.

**கல்வியின் மிக்கதாம்**
**செல்வமொன்றில்லையே**
**கண்மணி கேளடா நீ என்றன்**
**சொல்லையே முயற்சியுள்ள**
**மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்**

எனப் பஞ்சதந்திரம் குறிப்பிடுகிறது. எஃகு போன்ற தசையும் இரும்பு போன்ற நரம்பும் கொண்ட இளைஞர் சமுதாயம் இந்தியாவிற்குத் தேவை என வீரத்துறவி சுவாமி விவேகானந்தரும் கூறுகிறார். உடம்பிலே வலிமை வேண்டும். உள்ளத்திலே ஏற்படும் அச்சம் எனும் பேய் அகற்றப்படல் வேண்டும். செய்கின்ற காரியங்களில் ஊக்கம் வேண்டும். இதனைப் பாரதிதாசனின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.


**தேகத்திலே வலிவேற்று ~ உன்**
**சித்தத்திலே வரும் அச்சத்தை**
**மாற்று ~ நல் ஊக்கத்திலே**
**செயல் ஆற்று ~ நாளும்**
**உன்னருமைத் தமிழ் அன்னையைப் போற்று**

## சோர்வுகூடாது

குழந்தைகள் ஓடி விளையாட வேண்டும். சோர்வின்றி சுடரோடு பிரகாசிக்க வேண்டும். குழந்தைகளின் உடலிலோ, உள்ளத்திலோ சோர்வு ஏற்படக் கூடாது. கூட்டுறவு மனப்பான்மையோடு அனைவருடனும் கூடி விளையாட வேண்டும். குழந்தைகளின் மனம் புண்பட எதுவித வார்த்தையும் பேசக்கூடாது. இந்த உயர்ந்த சிந்தனைகளையெல்லாம் பாரதியார் தனது ''ஓடி விளையாடு பாப்பா'' என்ற பாடலின் ஊடாக விளக்குகிறார்.

**ஓடி விளையாடு பாப்பா ~ நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா ~ ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா**

குழந்தைகளின் உடல் வளர்ச்சியோடு அறிவு வளர்ச்சி, மன வளர்ச்சி, ஒற்றுமை உணர்ச்சி, தன்னம்பிக்கை, தன்மானம், மனிதப்பண்பு, அன்பு, நாட்டுப் பற்று போன்ற பண்புகள் எல்லாக் குழந்தைகளிடமும் உருவாக்கக் கூடியதாக கல்வி வழங்கப்படல் வேண்டும். குழந்தைகளிடம் அன்பு காட்டுவதில் அன்னையர்களாகவும் அறிவூட்டுவதில் தந்தையர்களாகவும், பழகுவதில் நண்பர்களாகவும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் திகழ வேண்டும்.




### நீள் பகைமை ஒழியட்டும் !

கந்தனது கொடி உயரக்
கருணை மழை பொழியட்டும்!
நிந்தனையே செய் வோரின்
நீள் பகைமை ஒழியட்டும்!
சந்ததமும் சாற்றி நிற்கும்
சமத்துவமும் ஓங் கட்டும்!
உந்தனடி போற்று தற்கு
உவந்து மனம் நெகிழட்டும்!

- கு. பகீரதன், நல்லூர் தெற்கு -

### தமிழர் அவலம் தீர்க்க ஓடிவா !

நாவலரும் யோகர் செல்லர் ஏத்தியே
நாளுமுன்னை வணங்கிநின்றார் போற்றியே
காவலனாய் நல்லைநகர் ஆட்சிசெய்
கந்தனுமை வேண்டிநின்றோம் மீட்சியே
சேவலுடன் மயிலும் வேலும் சூழவே
திருவருள்செய் தெங்களைநீ ஆளவே
தேவர்குறை தீர்த்தவடி வேலவா
செந்தமிழர் அவலந்தீர்க்க ஓடிவா!

- நயினை இரத்தினசிங்கம் -

### பெருமை பெறப் பார்

என்ன பெருவினை செய்தமோ நல்லூர
முன்னை வின்னையின் முடிவதுவோ
- பன்னிருகை
கொண்டெம்மைத் தூக்கியே, கோலோச்ச
வைத்துமுனைக்
பண்டைப் பெருமை பெறப் பார்.

- நயினைச்சோதி -

### அவனியைக் காத்திடையா!

நாலடியில் பாட்டெழுதி முருகா உந்தன்
காலடியில் தந்திடுறேன் ஏற்றிடு! - உமை
பாலனே! எனக்கருளும் சீலனே! - தீயோர்க்கு
காலனே உன்னடி சரணம் ஐயா!

குமரா முத்துக் குமரா - இந்தக்
குவலயம் ஒளிர நீ அருளையா!
அமரா எந்தன் குமரா - தினம்
அருளே தந்து அவனியைக் காத்திடையா!

- த. அஜந்தகுமார் -

### கொடியில் வேல்

ஏறிடும் கொடியில் வேல் ஆடும்
எங்கும் ஒளியில் வெற்றி பாடும்
கூறிடும் தமிழில் குமரன் சிரிக்கும்
கொடுமைகள் ஒழிந்திட மணிகள் ஒலிக்கும்.

- பு. திலீப்காந்த் -

### ஏறிட வேண்டும் குமரன்கொடி

வேண்டுவர் வேண்டுவதை,
அளித்திடும் வேலவனே!
எளியோர்க்கு அருள்புரியும்,
நல்லை நகர்க் கந்தா!
நிலவும் சமாதானமதை,
நிலைத்திட வைத்திடவே!
கானமயிலேறி,
காட்சி பல தந்து,
அனைவருக்கும் அருள்புரிய,
ஏறிட வேண்டும்!
குமரா உன் கரத்
திருக் கரக் கொடி

- ஆர். ஸ்வஸ் -

### கொடியேறும் நாளில் !

கொடியேற்றம்! இன்று கொடியேற்றம்!
பல்லூரும் பணிந்து போற்றும்
நல்லூரின் நற்றவா உனக்கு
செல்லூர நாடு விட்டோடி
பல்காலும் சென்றவர்கள் - இன்று
நல்லூரா உனைக்காண . . .
கல்வியுடன் காசினில்
சாந்தியுடன் சமாதானம்
தமிழருடன் தன்மானம்
தாயகத்தில் தனி வாழ்வு
தந்திடு முருகா! தந்திடு குமரா!

- நிரோஷினி கணேசலிங்கம் -

### அருளாட்சி புரிவாய் !

அலங்கார ரூபனே அருட்சோதியே
அசுரரை அழித்த அருந்தகையே
அபயம் என உன்பாதம் தொழுகின்றோம்
அருளாட்சி புரிந்து காத்திடுவாய் . . .

- நாகமணி மகேந்திரலிங்கம் -

## சி. பி. ஐ. வீதிச் சோதனை

(புதுடில்லி)

உயர் மட்டத்தில் ஊழலைத் தடுப்பதற்காக இந்திய மத்திய புலனாய்வுக் சழகம் (சி பி ஐ) நாடு முழுவதும் வீதிச் சோதனை நடத்தி வருகிறது

வீதிகள் மற்றும் அலுவலகங்களில் நடத்தப்பட்ட 114 சோதனையில் இதுவரை சுமார் ஒன்றரைக் கோடிரூபா ரொக்கப் பணம் 7 கோடி ரூபா மதிப்பீட்டுக்கான சொத்துக் குறித்த ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

(ஷ)

# தமிழர் தம் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே

# இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை

## விநாயகமூர்த்தி எம். பி. அழுத்தம் திருத்தமாக தெரிவிப்பு

(தென்மராட்சி)

அரசுக்கும்- புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 160 நாட்கள் கடந்துவிட்ட போதிலும் கூட அரசு தாய்லாந்து பேச்சு விடயத்தில் இன்னமும் இழுத்தடிப்பு நிலையைத் தோற்றுவித்துவருவதுவிசனத்துக்குரியது.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அ. விநாயகமூர்த்தி நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டின் போதுகாங்கிரஸ் கட்சியின் மூத்த உபதலைவர் கலாநிதி எஸ். குமரகுருபன் உபதலைவர் சீ வீ. கே. சிவஞானம் பொதுச் செயலாளர் து. சண்முகராஜா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

இம் மாநாட்டில் தலைவர் அ. விநாயகமூர்த்தி எம்.பி. தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புதான் என்பதை எமது கட்சி முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. எமது கட்சித் தலைவராக இருந்த அமரர்குமார் பொன்னம்பலம் என்ன லட்சியத்துக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்பட்டாரோ அதே வழியில் எமது கட்சி தொடர்ந்தும் செயற்படும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி 60 வருட பாரம்பரியமிக்கஅரசியல்கட்சியாகும். இதன் தனித்துவத்தைப் பேணப்பாடுபடும் வேளையில், தமிழர் கூட்டமைப்பையும் பலப்படுத்துவதற்கு நாம் அர்த்த புஷ்டியுடன் செயல்படுகின்றோம்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் நாம் எந்தளவுக்குத் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருக்க முடியுமோ அவ்வாறுஇருப்பது தான் நல்லதாகும்.

மேலும் தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் விதத்தில் ஜனாதிபதி சந்திரிகா இப்போது செயல்பட்டு வருகின்றார். எமது ஒற்றுமையைக் குலைப்பதில் ஜனாதிபதி செயல்படக்கூடாது எனக்கூறவிரும்புகின்றேன் என்றார்.

கட்சியின் துணைப்பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பொன்னம்பலம் கஜேந்திரகுமார் அங்கு குறிப்பிடும்போது,

எமதுகட்சியின் செயல்பாடுகளை நாம் குடாநாடெங்கும் விஸ்தரிக்க ஏற்பாடுகள் செய்துவருகின்றோம். யுத்தம் காரணமாக வலிவடக்கு, தென்மராட்சி பிரதேசங்களில் வெளியேறிய சுமார் 2 லட்சம் மக்கள் இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களுக்குச்சென்று மீளக் குடியமர முடியாமல் உள்ளனர். உயர் பாதுகாப்புவலயம்இருக்கும்வரை இயல்புவாழ்க்கை ஏற்படமாட்டாது. தமிழ்மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் காண்பதில் நாம் கரிசனையாகவே இருந்து வருகின்றோம்.

நாம் நாட்டில் இருக்கும் பேரினவாதிகள் பற்றி நல்ல அனுபவத்தைப் பெற்றுள்ளோம். அரசு-புலிகளுடனான பேச்சுவார்த்தை இன்னமும் தாமதித்து வருவது நமக்கு வேதனை தருகின்றது என்றார்.

உப தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அங்கு குறிப்பிடும் போது;

காங்கிரஸ் கட்சியின் செயற்பாடுகளை நாம் விஸ்தரித்துச் செயற்படவுள்ளதாகவும், தலைமைச் செயலகம் தீவிரமாக இயங்கும் எனவும் குறிப்பிட்டார். (உ-77,43)

# ஈராக்கைப் பழிக்குப் பழி வாங்க

# அமெரிக்காவுடன் இணையும் இஸ்ரேல்

(டெல்அவிவ்)

அமெரிக்கா ஈராக்மீது தாக்குதல் தொடுக்குமாயின், அதற்கு ஆதரவாக ஈராக்மீது ஏவுகணைத்தாக்குதல்களை நடத்துவதற்கு தயாராகவுள்ளதாக இஸ்ரேல் அமெரிக்காவிடம் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கெதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கைகளின் அடுத்த கட்டம் ஈராக்கில் இடம்பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்துவருகின்ற இவ் வேளையில் இஸ்ரேல் இவ்வாறு தெரிவித்திருப்பதை அடுத்து ஈராக்கிற்கும் இஸ்ரேலுக்குமிடையிலான முறுகல் நிலை மேலும் தீவிரமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இஸ்ரேல் தனது நீண்டதூர ஏவுகணைகளை ஈராக்கை குறிவைத்து நகர்த்தி வருவதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈராக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப்பரிசோதனைக் குழுவை அனுமதிப்பதற்கு அந்நாட்டு அதிபர் சாதம் ஹுசைன் இணங்கியுள்ள போதும் ஆயுதப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கா மறுத்து வருகிறது

இந்த நிலையில் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமாயின் ஈராக்கின் பரம எதிரியான இஸ்ரேல் அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட்டு, சர்வதேசரீதியாக நெருக்குதல்களுக்கு உள்ளாகும். பலஸ்தீன பிரச்சினையை திசை திருப்பவும்,

அதேவேளை அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படுவதன் மூலம் பலஸ்தீன பிரச்சினையில் அமெரிக்காவின் ஆதரவை மேலும் தனது பக்கம் திருப்பவும் இஸ்ரேல் முயன்று வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை வளை குடா யுத்தத்தின்போது ஈராக்கின் 39 ஏவுகணைகள் இஸ்ரேலில் வீழ்ந்து வெடித்ததனால் பெரும் உயிர் உடைமைஇழப்புக்கள் ஏற்பட்டமை தெரிந்ததே.

இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் அமெரிக்காவுடன் இணைந்து ஈராக் மீது தாக்குதல் நடத்துவதற்கு இஸ்ரேல் தயாராகிவருவதாகக் கூறப்படுகிறது. (த)

## துருக்கி பொருளாதார அமைச்சர் இராஜினாமா

(அங்கரா)

துருக்கியின் பொருளாதார அமைச்சர் சமல்பார்க் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

துருக்கியின் நவீன சோஷலிச கொள்கையின் அடிப்படையில் புதிய கூட்டணியை அமைக்கும் முயற்சியாகவே இவர் தனது பதவியை இராஜினாமா செய்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

கமலின் பதவி விலகல் தற்போதைய அரசு கவிழுவதை தடுக்க துருக்கியின் பிரதமர் எடுத்த முயற்சிகளுக்கு கிடைத்த பின்னடைவு எனவும் கருதப்படுகிறது. (உ-8)

## நீரிலும் நிலத்திலும் செல்லும் வாகனம்

### சென்னை மாணவர்கள் உருவாக்கம்

(சென்னை)

நிலத்திலும் நீரிலும் செல்லக் கூடிய வாகனம ஒன்றை சென்னை எம்.ஜிஆர்.பொறியியற் கல்லூரி மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்

ரகுராஜன், மஞ்சுநாதன் ஆகியோர் இணைந்து உருவாக்கிய ஒற்றை என்ஞ்ஜின் கொண்ட இந்த வாகனத்தை இலகுவாக இயக்க முடிவதுடன்-சதுப்பு நிலங்கள் மற்றும் பனிப்பாறைகள நிறைந்த இடங்களிலும் இலாவகமாக செலுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுளளது.

அதேவேளை இக்கல்லூரியைச் சேர்ந்த மதன், ஹரிஸ் ஆகிய இருமாணவர்களும் சூரியக் கலத்தில் இயங்கும் கார் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

'சூரியபுத்திரா' என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கார் மணிக்கு 45கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடியது இது பற்றரியிலும் செயற்படக்கூடியதாகவடிவமைக்கப் பட்டுளளது. (த)

## உத்தராஞ்சலில் மழை இதுவரை 18 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தராஞ்சல் மாநிலம் தெகிறி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை இடி மின்னலுடன் கூடிய மழையினால் 18 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மழையினால் புத்தகேதாப் பகுதியில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ஷ

உலக தரிசனம்

# ஈராக் இரகசிய பாதாளஅறையில் பிரி. பிரமுகர், சதாமை சந்திப்பு

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு அருகிலுள்ள இரகசிய பாதாளஅறையில் ஜனாதிபதி சதாம் ஹுசைனை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான தாக்குதல் என்ற போர்வையில் ஈராக் மீது போர் தொடுக்குமாயின் ஈராக் எவ்வாறு நடந்து கொள்ளும்என்பது குறித்து சதாம் ஹுசைன் விளக்கிக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, ஐக்கியநாடுகள்சபையின் ஆயுதப்பரிசோதனைக்குழுவை ஈராக்கிற்குள் அனுமதிப்பதற்கு சதாம் இணங்கியுள்ளதாக இச்சந்திப்புக்குறித்து தாம் வரைந்துள்ள கட்டுரை ஒன்றில் சம்பந்தப்பட்டபிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுடான உறவை மேலும் பலப்படுத்திக் கொள்ள ஈராக் விருப்பம் கொண்டுள்ளதாக அவர் அக்கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## சிறந்த வீரர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் 30 ஆம் திகதி கொழும்பில நடைபெறவிருக்கும் மைலோ வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிக்கு யாழ். மாவட்ட பாடசாலைகளில் இருந்து சிறந்த வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் நேற்றைய தினம் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

இப் பயிற்சி முகாமில் நேற்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி பங்கு பற்றியது.

இன்று காலை 7.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியும் பி.ப3·00 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் பங்குபற்றவுள்ளன.

இப்பயிற்சி முகாமில் இருந்து சிறந்த வீரராக தெரிவு செய்யப்படுபவர்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கைப் போட்டிக்கு அழைக்கப் படவுள்ளனர். (உ-2)

## விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உதை பந்தாட்டப் போட்டி கல்வி அமைச்சின் அனுசரணையுடனும் இளைஞா விவகார விளையாட்டுத் துறை அமைச்சினது ஆலோசனைக்கு அமையவும் 14, 16, 18 வயதுப் பிரிவுக்கான போட்டிகள் இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பாடசாலைகளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களை எதிர் வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இப் போட்டி தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை உதை பந்தாட்ட சங்கத்தின் யாழ் மாவட்டத்திற்கான இணைப்பாளர் எஸ். எச்.கே. முகைதீன் கேட்டுளளார்.

(உ-2)

## நிர்வாக சபை தெரிவு

மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக த. நாகேஸ்வரன், செயலாளராக க. சாந்தகுமார், பொருளாளராக ஜே ரகேஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்;

(உ-43)

## போக்குவரத்துக்கு இடையூறு

(உடுவில்)

மல்லாகம் நீலியம்பனைபிள்ளையார் கோயிலுக்கு முன்பாக உள்ளமின்கம்பமொன்று முறிந்து விழுந்துள்ளதால்அப் பகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

அத்துடன் மின்சார வயர் வீதியின் குறுக்காக தொங்குவதால் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.(உ-261)

## முன்பள்ளி மீள இயங்குகிறது

(திருநெல்வேலி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள வடமராட்சி கிழக்கு மாமுனைப்பகுதிமுன்பள்ளி நேற்று முதல்மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகள் காரணமாகஇங்குள்ள முன்பள்ளிகள் அனைத்தும் செயலிழந்திருந்தமையும்.

மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது முன்பள்ளி இது வென்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-43)

தேரான் தெளிவும் தெளிந் தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்
குறள்

# வலம்புரி

## திட்டம் என்ன?

ஜனாதிபதிக்கும், அரசுக்குமிடையிலான அரசியல் நெருக்கடி சற்று தணிவதுபோல இருப்பினும் மறைமுகத் திட்டமொன்று ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும், பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியும்தயாரித்துவந்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஜனாதிபதி சந்திரிகாவின் பொ. ஐ. முன்னணிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைப்பதே நோக்கம். அதனாற்றான்பாராளுமன்றத்தை ஒருபோதும்கலைக்கமாட்டேன் என ஜனாதிபதி வெளிப்படையாகத்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இவ்வறிவிப்பு உயர்நோக்கம் கொண்டதென்பதை பொ. ஐ. முன்னணியின் பேச்சாளர் சரத்அமுனுகமவின் தகவல் உறுதிப்படுத்துகின்றது. அதாவது பொ. ஐ. முன்னணி, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைபலத்தை பெற்று ஆட்சியமைக்கும் என அவர்கூறியிருப்பதன் மூலம், பாராளுமன்றம் கலைக்கும் தீர்மானத்தை ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றில் நிறைவேற்றினாலும், தற்போது தேர்தல் நடத்தினால் அதற்கு நாட்டின் பொருளாதாரம் ஈடு கொடுக்காது எனக்கூறி ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தில் ஐ. தே. முன்னணிக்கு அடுத்ததான பலத்தைக் கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியைஆட்சியமைக்குமாறு கோருவார். அவ்வாறு ஜனாதிபதிஅழைப்புவிடும்போது ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தனது ஆதரவைப் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு வழங்கமுன்வரும்.

பொ.ஐ முன்னணியின் ஆட்சிக்காலம்முடிவதற்கு முன்னதாக அக்கட்சியின் கலைப்புக்குஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு காரணமாக இருந்ததோ அதே முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்கவிழ்ப்புக்கும் காரணமாக இருக்கப் போவது கசப்பான உண்மை

அரசியலில் நிரந்தரநட்புமில்லை, எதிர்ப்பும் இல்லை என்பதற்கு உதாரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் விளங்கப் போவதும் இதற்கானதிட்டங்கள் மறைமுகமாகத் தயாரிக்கப்படுவதும் வெறும் கற்பனைகளல்ல.

# செயற்கை இரசாயனங்களின் பாவனையற்ற காய்கறி உணவுகளே ஆரோக்கியம் தருபவை

## மருத்துவ விளக்கம்

த. சுவேதனன்
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகில் வாழும் எல்லா விலங்குகளுக்கும் உணவும் உறைவிடமும் அத்தியாவசியமானவை சிறப்படைந்த விலங்கான மனிதனுக்கு ஆடையும் அவனில் பாதியாகி விட்டது. மனிதன் உள்ளெடுக்கின்ற உணவானது அவனுக்குப் பல வழிகளிலும் பயன் படுகின்றது சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பது பழமொழி நல்ல சுகநலத்துடன் உடல் இருந்தாலே உலகில் வாழலாம் என்பது புது மொழி. நாம் உண்ணும் உணவின் ஒரு பகுதி என்பு, பல், தசை உள் அங்கங்கள் போன்ற உடற் பாகங்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தப் படுகின்றது. மேலும் எமது நாளாந்தச் செயற்பாடுகளுக்கான சக்தியை வழங்கும் எரிபொருளாகவும் பயன் படுகின்றது.

### உணவே மருந்து

காய்கறிகள், தானியங்கள், கடலுணவுப் பொருட்கள், விலங்குணவுப் பொருட்கள் என எங்கள் உணவு மூலகங்கள் உள்ளன. இக்காலத்தில் வேகமான உலக முன்னேற்றத்தோடு, எம் உணவுப் பழக்கமும் மாறத் தொடங்கியுள்ளது. எமது சாப்பாட்டு மேசைகளையும் அடுப்படிகளையும் தயாரிக்கப்பட்ட உணவுகள் பெருமளவில் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன எமது முந்தைய தலை முறையினர் பெருமளவு இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்க்கையை உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்ததோடு உணவையே மருந்தாகவும் பயன்படுத்தத் தெரிந்திருந்தனர். இக்காலத்திலோ மருந்துகளையேஉணவாகஉள்ளெடுக்கின்ற ஒரு சமூகத்தைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இன்று எம்மவரிடையே காணப்படுகின்ற மலச் சிக்கல் போன்ற குடல் வருத்தங்களுக்கும் பல உறுப்புகளில் ஏற்படுகின்ற புற்று நோய்களுக்கும் அவர்களது உணவுப் பழக்க வழக்கமே பெருமளவில் காரணமாக அமைகின்றது.

### செயற்கை இரசாயனங்கள்

இயற்கையாகக் கிடைக்க வேண்டிய விற்றமின்கள், கனியுப்புகள் போன்ற போசனைப் பதார்த்தங்களைச் செயற்கையான மாத்திரைகளில் எம்மவர்கள் தேடுகின்ற அவலத்தை இப்போது காணக் கூடியதாக உள்ளது. எங்கள் பிரதேசத்தில் பெறப்படும் உணவுப் பொருட்கள் பெருமளவில் தெரிந்தோ, தெரியாமலோ செயற்கை இரசாயனங்களின் சேர்க்கைக்கு உட்பட்டே கிடைக்கின்றன. இச்சேர்க்கையானது பொருட்கள் உற்பத்தியாகும் இடத்திலிருந்துபோக்கு வரத்து களஞ்சியம், விநியோகம் எனத் தொடர்ந்து எங்கள் வீட்டுச் சமையலறை வரைவருகின்றது எனவே,உயிருக்குஆதாரமான உணவுநஞ்சானால்உடலுக்குப் பல வகையான சேதங்களை உருவாக்குகின்றது.இன்றுவிவசாய உலகம் எதிர் நோக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக அதீத பீடைநாசினிகள், களை கொல்லிகள் மற்றும் செயற்கை உரங்களின் பாவனை உள்ளது. தற்போது விவசாயத்தில் முன்னேறிய தேசங்கள் இயற்கையோடு இணைந்த விவசாயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்க, நம்மவர்களோ மேலும் மேலும் செயற்கையை நாடுபவர்களாக உள்ளனர். எம்மவர்கள் எதிர்காலத்தில் வரக் கூடிய ஆபத்துக்களை அறியாதவர்களாய், குறுகியகாலத்தில் கூடிய விளைவுகளைப் பெறுவதற்கு, செயற்கையான கிருமிநாசினிகள் மற்றும் உரங்களை அளவுக்கதிகமாக பெருமளவில் பயன்படுத்துகிறார்கள்.

### நச்சுத் தன்மை அதிகரிப்பு

எங்களால் விரும்பிச்சாப்பிடப்படுகின்ற, பிஞ்சுக் கத்தரி, வெண்டி, பயற்றை, கோவா, குண்டுத்தக்காளி, போன்றவை எல்லாம், பீடை நாசினிகளால் ஏதோ ஒரு முறையாவது குளிப்பாட்டப் பட்டவையாகும். ஏனெனில், இவற்றில் பீடைகளின் தாக்கம் கூடியளவு ஏற்படுவதால், அதனைத் தடுக்கவென, தொடர்ச்சியாக குறித்தகால இடைவெளியில் பீடைநாசினிகளை விசிற வேண்டியதேவை உள்ளது. இக் காலப்பகுதியில் தான் அறுவடையும் செய்ய வேண்டியுள்ளது. எனவே, சந்தைக்கு வரும் பொருட்கள் நச்சுத்தன்மை கூடுதலாக இருக்கும் நிகழ் தகவு அதிகமாகஉள்ளது.பொதுவாகவே, கிருமி நாசினிகள் விசிறிய 10-14 நாட்களுக்குப் பின்பே விளைபொருட்களை உணவுக்காகப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், இக் காலப்பகுதியில் பெரும் பாலானவை சூரியஒளியால் பிரிகையடைந்து, அவற்றின் நச்சுத்தன்மை குறைந்து விடும், ஆனால் எமது விவசாயிகளோ குறித்த கால இடைவெளியைக் கொடுக்காமல் விளைபொருட்களைச சந்தைப்படுத்துகிறார்கள். எனவே, பனிநீரில் தோய்ந்த காய்கறிகளென நாம் ஆசையாய் வாங்குபவற்றில் விசிறப் பட்ட நஞ்சுகளில் சிறுபகுதி யாவது மிஞ்சியிருக்கும்!

சில பதார்த்தங்கள் பிரிகையடையாது உணவுடன் எமது உடலைஅடைகின்றன. இவை எமது உடலில் பல உள்ளுறுப்புகளில் படிப்படியாகவே தேங்கத் தொடங்குகின்றன, இவ்வாறு தேங்கி ஒரு குறித்த செறிவை அடைந்ததும்,உடற்களைப்பு, பலவீனம் தசைப் பிடிப்பு, பார்வைக் கோளாறுகள் போன்ற நோய் அறிகுறிகளாக வெளிப்படுகின்றனா, சில சமயங்களில் இவை புற்று நோய்கள் போன்ற பாரிய நோய்களாகவும் வெளிப்படலாம். மலைநாட்டின் பயிராக ஒரு காலத்தில் கருதப்பட்ட கோவா,இன்றைக்கு எம் பிரதேசத்தில் செய்கை பண்ணப் படுகின்றது. இதில் புழுக்களின் தாக்கம் மிக அதிகமாகும். எனவே, தொடர் இராணுவக் கண்காணிப்புப் போல் பீடைநாசினிப் பிரயோகம் செய்யப்படவேண்டும் தெளிக்கப்படுகின்ற இரசாயனங்கள் விரிந்த கோவா இதழ்களில் தேங்கி அதுமுட்டையாகவரும் போதும், அதனுள்ளே இருக்கலாம்-சூரிய ஒளிபடும்வாய்ப்புக்குறைந்து நச்சுத் தன்மை அழியாமல் போகலாம்.எம்மில் ஒருசிலராவது, கோவாத் தோட்டத்துக்கு அருகிலுள்ள வீதியால் போகும்போது காற்றில் வருகின்ற மருந்து நாற்றத்தை நுகர்ந்திருக்கலாம்.

### விவசாய இரசாயனங்களினால் விலங்குகளுக்கும்பாதிப்பு

சீசனுக்கு என்று வருகிற வெங்காயத்தடல் பெரும் பாலானோர்க்குப் பிடித்தஒரு உணவு,இதுவும் பீடைநாசினிகளிற் குளித்தே சந்தைக்கு வருகின்றது. ஆண்டவனைப் போல் எங்கும் நிறைந்தவை விவசாய இரசாயனங்கள் என்னும்படி எல்லாப் பொருட்களையும் இன்றையவிஞ்ஞான முன்னேற்றம் தீண்டி வருகின்றது. எனினும் மரவள்ளி, பூசணி,கறணை போன்றவை இன்றுவரை கிருமிநாசினிகளின் தாக்கத்திலிருந்து பெருமளவு தப்பியுள்ளன. விலங்குணவுகளையாவது இவற்றின் நெடுங்கரங்கள் விட்டு வைத்தனவா என்றால் அதுவும் இல்லை,புல்லாய்ப் பூடாய், பச்சைத் தாவரங்களாய், பருகும் நீராய்என எல்லா இடங்களிலும் ஏதோ ஒரு விதத்தில் கலந்திருக்கின்றன. கிருமி நாசினி விசிறப்பட்ட பயிர்ச் செய்கை நிலங்களில் மேய்ந்த கால்நடைகளை அடைந்த கிருமி நாசினிகள் அவற்றை நாம் இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் பயன் படுத்தும் போது எமது உடலை வந்தடைகின்றன. இவ்வாறு கடலுணவுகளும் ஆபத்துள்ளதாக அறிய இருக்கின்றது. கடைகளில் இன்று தொங்குகின்ற வாழைக் குலைகளைப் பார்த்தால் ஒருகிலோவாவது வாங்கிப் போகவேண்டும்என்றஆசை வராமல் போகாது.

அவ்வளவுக்கு முழிப்பான பழங்களாக இருக்கும். அவற்றைவாங்கி வீட்டுக்குக் கொண்டுபோய்ப்பார்த்தால் சுவையற்றவையாக நீர்த்தன்மையானவையாக இருப்பதைக் காணலாம். காரணத்தைத் தேடிப் போனால் கிடைக்கின்ற விடை வியப்படையவைக்கும். இரசாயன உரங்களின் கைவரிசையில் முழிப்பான பழங்கள் உருவாகி இருக்கும். அவற்றை மஞ்சள் வர்ணமாக மாற்றுவதற்கு உரவகைகளைக் கரைத்துத் தெளித்திருப்பார்கள். பெரிய பழக்கவர்ச்சியில் நாம் வேண்டாத வியாதிக்கான மூலகங்களையும் வேண்டுபவர்களாக இருக்கின்றோம்.

### நைதரசனால்நீலக்குழந்தை


அண்மையில் விவசாய பீடத்தினரால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய ஆராய்ச்சியில், விவசாய நிலங்களுக்கு அருகிலுள்ள நீர்நிலைகளில் உரவகைகளின் செறிவு கணிப்பிடப்பட்டபோது, அது மனிதனுக்கு நச்சுவிளைவை ஏற்படுத்தும் பாவனை மட்டத்தைத் தாண்டிவிட்டமை தெரியவந்தது. இதுதொடர்பான ஆராய்ச்சி மிகவும் முனைப்பாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு நைதரசன் உரச்செறிவு அதிகரிப்பது எமது வருங்காலத் தாய்மார்கள் நீலக்குழந்தைகளைப் பெறக்கூடியநிலைக்கு இட்டுச் சொல்லலாம்எனக் கருதப்படுகிறது. நீலக் குழந்தை விளைவானது,உரத்தில்உள்ள நைதரசன் உணவின் ஊடாகவும், நீரின் ஊடாகவும் தாயைஅடைந்து அதிலிருந்து பிள்ளைக்குச் செல்வதால் ஏற்படும் ஒரு பாரியவிளைவாகும்.

செயற்கை இரசாயனங்களைத்தவிர்த்து குப்பை போன்ற இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தும்போது, கூட நாம் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம். ஏனெனில், குப்பை,கூழங்களுடன் கலந்திருக்கும் ஈயம் இரசம்போன்ற காரலோகங்கள் நிலத்தைஅடைந்து, தாவரங்களால் வேகமாக உறிஞ்சப்பட்டு அவற்றில் தேங்குகின்றன; பின்னர் நாம் அவற்றை உணவாக உள்ளெடுக்கும்போது எம்மையும் வந்தடைகின்றன.

விவசாய விளைபொருட்கள் களஞ்சியங்களைஅடைந்ததும் அங்குவேறுபல இரசாயன சேர்க்கைகளுக்கு உட்படுத்தப் படுகின்றன. பாதுகாப்பு இரசாயனங்கள், நிறப் பொருட்கள், வாசனைப் பொருட்கள், இனிப்பூட்டும் இரசாயனங்கள், ஒட்சியேற்ற எதிர்ப்பு இரசாயனங்கள் போன்றன இவற்றுள் சிலவாகும். சக்கரினும் கோழிச் சாயமும்சேர்த்துத்தயாரிக்கப் பட்ட இனிப்புப்பண்டங்களை திருவிழாக்காலங்களில் சிறுவர்கள போட்டியிட்டு வாங்கியுண்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவையெல்லாம் எமது உடலுக்கு ஆபத்தானவையாக அமையலாம்.

(6ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்



### கடமை

உங்கள் சேவைக்குப்பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காதீர்கள், ஒருநன்றி உணர்வு, ஒருபுன்னகை, அல்லது நன்றிஎன்ற சொல், இவற்றில் எதையாவதுபிரதிபலனாக எதிர்பார்க்காமல், பிறருக்குச் சேவை செய்யஉங்கள் மனம் அனுமதிக்காது. இப்படித்தான் அது இருக்கிறது. நியாயமற்ற முறையில் குறைகூறப்பட்டாலும் யாருக்குத் தொண்டுசெய்தீர்களோ. அவரால் இழிவாகப்பேசப்பட்டாலும், ஆத்ம திருப்தியுடன் தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டும். புகழ்ச்சிக்கு அல்லது மகிழ்ச்சிக்கு அடிமையாகிப் பின்செல்லாதீர்கள், கடமையைச் செய்வோம் என்பதே உங்கள்நோக்கமாக இருக்கவேண்டும்.

-சுவாமி சிவானந்தர்

## அபிவிருத்திக் கூட்டத்தை...

மகேஸ்வரன் தன்னையே அப்பதவிக்கு நியமிக்க வேண்டுமென றும் அப்பதவிக்குரியவரை நியமிக்கும் அதிகாரம் அமைச்சர் ஜெயலத்துக்கு இல்லை என்றும் ஐக்கிய தேசியக்கட்சிக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்துபிரதமர் ரனில் விக்கிரமசிங்க யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைமைப் பதவியை ஆனந்தசங்கரியிடம் இருந்து பறித்தெடுக்காது அமைச்சர் மகேஸ்வரனுக்கும் அப்பதவியை வழங்கினார்.

இந் நிலையில் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தை பாராளுமன்ற உறுப்பினரா அமைச்சரா தலைமை தாங்கி நடத்துவது என்ற அதிகாரப் போட்டியில் இருவரும் தாமே அபிவிருத்திக் குழுவின் பெருந்தலைவர்கள் என்று கூறிக்கொண்டனர்.

இப்பின்னணியில் அதிருப்தியுற்ற அமைச்சர் மகேஸ்வரன் அபிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிய வருகின்றது.

இதேவேளை ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான கே.என். டக்ளஸ்தேவானந்தா என். மதனராஜா ஆகியோரும் இந்தியா சென்றிருக்கும் தமிழர் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(இ-6)

## அரசைப் பதவி நீக்கும் வரை...

இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்கும் வரை அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடரும் என்று எச்சரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன உரையாற்றுகையில்;

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் பதவிக் காலத்துக்குள் ஐக்கிய தேசிய முன்னணியிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவோம் என்று உறுதியளித்துள்ளார். (இ)

## நெடுந்தீவில் இன்று "சங்கநாதம்" இசை நிகழ்ச்சி

(நெடுந்தீவு)

விடுதலைப் புலிகளின் போராளிகளும், தமிழீழக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் "சங்கநாதம்" இசை நிகழ்ச்சி இன்று இரவு நெடுந்தீவு மகா வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளுவதற்காக முக்கிய இசைக் கலைஞர்கள் பலர் வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். (இ-250)

## ஜனாதிபதி...

ஆண்டுகளுக்கு பாராளுமன்றத்தை கலைப்பதில்லை என்ற நிபந்தனை முக்கிய அம்சமாக அடங்கியுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அண்மையில் ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் பிரதமரை தனியாகச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தமையும், ஜனாதிபதியின் ஏற்பாட்டில் இப் பேச்சு இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆசிய மெய்வல்லுநர் போட்டி நேற்றுடன் முடிவு

(கொழும்பு)



14ஆவது ஆசிய மெய்வல்லுநர் போட்டிகள் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற்று நேற்றுடன் முடிவடைந்தது.

இலங்கை வீரர்கள் சிறப்பாக விளையாடி 3 தங்கம் உட பட 6 பதக்கங்களை வென்று சாதனை படைத்தார்கள். இவர்கள் பெற்ற பதக்கங்கள் மூலம் இலங்கைக்கு 6 வது இடம் கிடைத்தது.

குருநாகர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க பெண்களுக்கான 200 மீற்றர் 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டு தங்கப் பதக்கங்களையும், ஆண்களுக்கான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட அணி ஒரு தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கொண்டது. இதே போட்டியில் பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் ஒன்றும் கிடைத்தது. 39 நாடுகள் கலந்து கொண்ட 14வது ஆசிய மெய்வல்லுநர் போட்டியின் சம்பியன் பட்டத்தை சீனா வென்றது. 10 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்களை சீனா பெற்றுக் கொண்டது. 8 தங்கம்,2 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று கட்டார் 2ம் இடத்தையும், கசகஸ்தான் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (ந-5)

## புலிகளின்...

6மணிக்கும் மாலை 6மணிக்கும் இடையில் விடுதலைப்புலிகளின் கடல் பயணத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் இக் கடல் வழிப் பயணம் தொடர்பாக 48 மணி நேரத்திற்கு முன்பு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக இலங்கை கடற் படைக்கு அறிவிக்கப்படவேண்டும்.

கடல் வழி பயணத்தின் நோக்கம், புறப்படும் இடம், சென்றடையும் இடம், நேரம், பிரயாணம் செய்யும் கடல் வழி, படகுகளின் விபரம், மாலுமிகள் உட்பட பயணம் செய்வோரின் எண்ணிக்கை போன்ற விபரங்களுடன் கடல் பயணத்தின்போது கடற் படை மற்றும் கண்காணிப்புக் குழுவினருடன் தொடர்பு கொள்ளும் வழி முறைகள் குறித்தும் அறிவிக்கப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் பயணம் செய்யும் படகுகளில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடி பறக்கவிடப்படவேண்டும். சகல படகுகளிலும் குறைந்தது ஒரு கண்காணிப்புக் குழு பிரதிநிதியாவது பயணம் செய்ய வேண்டும். அந்தப் பிரதிநிதி படகைச் சோதனை செய்ய அனுமதிக்க வேண்டும். அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பிரதேசங்களில் பிரவேசிக்கக் கூடாது. பயணம் செய்பவர்கள் ஆயுதம் தரித்திருக்கக் கூடாது. ஆனால் மாலுமிகள் மட்டும் தற்பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பர் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளின் கடல் போக்குவரத்து குறித்து சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூ ஹெவடே, பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்கலண்ட் ஆகியோர் இம் மாதம் 2ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
G.C.E. O/L
சமூகக்கல்வியும் வரலாறும்
அலகுரீதியான மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்
ஆரம்பம் 14.08.2002
புதன் கிழமை காலை 6 மணி(ப.நே)
BY.E.A.ஜெயன்

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் ...

திட்ட நிதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு தலா 35 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

அத்துடன் அந் நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் குறித்த விபரங்களை உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறினார்.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டின் சித்த மருத்துவக் கல்லூரி புனரமைப்பு, நல்லூர் சங்கிலி அரசன் மாளிகை புனரமைப்பு, வீதிகள் புனரமைப்பு, பாடசாலைக் கட்டடம் அமைத்தல், உபகரணங்கள் வழங்கல், மீளக்குடிமர்ந்தோருக்கும் விதவைகளுக்குமான புனர்வாழ்வுத் திட்டங்கள் என்பவற்றுக்கு நிதி ஒதுக்குவது என முடிவுசெய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கு 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்குவது என்றும் கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

இதேவேளை கூட்டத்திற்கு சமூகமளிக்காத நிலையிலும் அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவு விபரங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான கே.என். டக்ளஸ் தேவானந்தா, என். மதனராஜா ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட முன்மொழிவில் டக்ளஸ் தேவானந்தாவின் கையொப்பம் இல்லாததால் அது சபையில் நிராகரிக்கப்பட்டது.

இதேவேளை தேசிய பட்டியல் எம்.பி யான துரைரட்ணசிங்கம் தமது ஒதுக்கீட்டு நிதியில் பத்து இலட்சம் ரூபாவை வன்னிப் பகுதி அபிவிருத்திக்கும் 25இலட்சம் ரூபாவை யாழ். மாவட்ட அபிவிருத்திக்கும் வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-6)

## காணாமல்...

ஊழியர்கள் கடமைக்கு செல்ல முடியாது திரும்பிச் சென்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் நிலைமையினை நேரில் அறிந்து கொள்ளும் பொருட்டு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வீ. ஆனந்தசங்கரி, ந. ரவிராஜ், அ. விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் செயலகத்திற்கு சென்றனர்.

அங்கு மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் காணாமல் போனோரின் உறவினர்கள் ஆறு பேரை நாளை கொழும்புக்கு அழைத்துச் சென்று பிரதமர் ரனில் விக்கிரமசிங்கா மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பேர்னான்டோ ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத் ஏற்பாடு செய்வதாகவும், களுத்துறை மற்றும் பூசா சிறைச்சாலைளுக்கு அழைத்துச் சென்று காணாமல் போனோரைத் தேட சந்தர்ப்பம் அளிப்பதாகவும், காணாமல் போனோர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்ய சட்ட உதவி வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுதிமொழியை அடுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நண்பகல் 1மணியளவில் தமது போராட்டத்தை கைவிட்டனர்.

இதேவேளை கொழும்பு சென்றும் அரசிடம் இருந்து சாதகமான பதில் கிடைக்காவிடில் மீண்டும் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தை தொடங்குவோம் என்று காணாமல் போனோர் சங்க உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர். (இ-6)

## மகாநாயக்கருடன்...

கோள் இன்றி போர் நிறுத்தத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதனாலேயே அரசின் சமாதான முயற்சிகளுக்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக அவர்கள் தேரரிடம் கூறியுள்ளனர்.

இதேவேளை நாட்டுக்கு நன்மையளிக்கக் கூடிய சமாதான முயற்சிக்கு தமது முழுமையான ஆதரவு எப்பொழுதும் உண்டு என்று மகாநாயக்க தேரர் ரம்புக்வெல விபஸ்சி தேரர் ஜே.வி.பியினரிடம் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### யாழ்ப்பாண மாநகரசபை

### நல்லூர் உற்சவம் 2002 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்த சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் இன்று 13.08.2002 ஆம் திகதி தொடக்கம் 08.09.2002 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும்:

01) அரசடிச் சந்திக்கும் 2ம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;

பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;

RAMCO CEMENT

# RAMCO CEMENT

## ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
ராம்கோ *RAMCO* சிமெந்து (கோபுர மார்க்)
விற்பனைக்கு வந்து விட்டது.

❄ *தேவையான நிறுவனங்கள் உடன் தொடர்பு கொள்ளவும் முன்கூட்டியே பதிவுசெய்பவர்களுக்கு இலவசமாக லொறி மூலம் விநியோகம் செய்யப்படும்.*

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதி நிறுவனம்:

**ஈஸ்வர பகவான் & கொம்பனி**

[c/4846] 91,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். *T.P. 021 - 2350*


…ப்பட்டிருக்கும்:

01) ✲ அரசடிச் சந்திக்கும் 2ம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;

✲ பிராமணக கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;

✲ செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து செட்டித் தெருவின் வட பாகம்;

02) ✲ பேருந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச்சந்தையூடாகச் செல்லல்.

✲ பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேருந்துகளும், சிற்றூர்திகளும் செல்வது முற்றாக தடைசெய்யப்படும்.

03) வாகனத் தரிப்பிடங்கள்

✲ முத்திரைச்சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்;

✲ கந்தர்மடச் சந்திக்கு அப்பால் அரசடிவீதியிலும்;

✲ அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்தறை வீதியிலும்;

✲ செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும்.

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

[C/4838]


# இலங்கை வங்கி



தனது 63 வருட கால அனுபவத்தையும்
உன்னத சேவையையும் வழங்க திருநெல்வேலிக்கு வருகின்றது.
பூரண கணனி மயப்படுத்தப்பட்ட சேவையினைப் பெற தயாராகுங்கள்.

இலங்கை வங்கி என்றும் உங்களுடன்

இலங்கை வங்கி,
பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 13.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.